Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் மூக்குக் கண்ணாடி அகம்

இல : 546, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021 222 7893



- பல் கட்டுவதற்கும்
- பற்களுக்கு கிளிப்போடுவதற்கும்
- இலவச கண்பரிசோதனை செய்து,

நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.



(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 01ஆம் நாள் ஹிஜ்ரி 1427 றம்ழான் 02 (17.10.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 17

# இராணுவ அதிகாரி கொன்றுபுதைத்த சாரதியின் சடலத்தின் எச்சங்கள் மீட்பு!

பல்வேறு வாகனக் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடையவரென சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட இராணுவ அதிகாரி பணியாற்றும் மன்னார் உயிலங்குளம் இராணுவ முகாமிலிருந்து - அவரால் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட சாரதி ஒருவரின் சடலத்தின் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை கண்டி வத்தேகம பகுதியில் கடத்தப்பட்ட வாகனமொன்றுடன் மன்னார் மாதோட்டம் இராணுவ முகாமில் பணியாற்றும் மேஜர் அனுருத்த சம்பிக்கவும் கோப்ரல் எம்.ஜி.குமாரதிலகவும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

15 இற்கும் மேற்பட்ட வாகனங்களைக் கடத்தியதாகவும், அநுராதபுரத்தில் வாகனச் சாரதி ஒருவரைக் கொலை செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இந்த இராணுவ அதிகாரியிடம் இருந்து ஏற்கனவே ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டிருந்தன.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் - உயிலங்குளம் இராணுவ முகாமில் மேஜர் அனுருத்த சம்பிக்க பணியாற்றிய போது, தங்கியிருந்த அறையைச் சோதனையிட்டனர்.

இந்தச் சோதனையின்போது, பல வாகனங்களின் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் இந்த அறையில் புதைக்கப்பட்டிருந்த - அநுராதபுரத்தில் வாகனத்துடன் கடத்தப்பட்ட சாரதியின் சடலத்தின் எச்சங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

மேற்படி சாரதியை கொலைசெய்த பின்னர் எஞ்சியிருந்த எச்சங்களை மேற்படி இராணுவ அதிகாரி தனது அறையில் புதைத்து வைத்திருந்தார் எனத் தெரியவருகிறது.

தோண்டியெடுக்கப்பட்ட சடலத்தின் எச்சங்களை பொலிஸார் மேலதிக வைத்திய பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

# மனிதாபிமான உதவிகளை வழங்க பின்லாந்து அரசாங்கம் உறுதியளிப்பு!

(கொழும்பு)



வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கான மனிதாபிமான உதவிப்பணிகளைத் தொடாந்து வழங்குவதாகவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும் அதனுடன் இணைந்த கண்காணிப்புக் குழுவினரின் நடவடிக்கைக்கும் தொடர்ந்தும் நீடித்த ஆதரவு வழங்கப்படும் எனவும் பின்லாந்து அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின்போதே பின்லாந்து நாட்டின் அமெரிக்க மற்றும் ஆசிய நாடுகளுக்கான வெளிவிவகார அமைச்சின் இயக்குநர் பய்வி லூயோஸ் றறினென் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இந்தச் சந்திப்பின்போது தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் என்பன குறித்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் பின்லாந்து அரச அதிகாரிகளுக்கு எடுத்து விளக்கினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய-இலங்கை பாதுகாப்பு உடன்பாடு இவ்வாரம் கொழும்பில் இறுதிப் பேச்சு!

# இவ்வாரம் கொழும்பில் இறுதிப் பேச்சு!

## இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த சந்திரிகா இந்தியா செல்கிறார்!

(கொழும்பு)



இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளிடையில் உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாராதுங்க அடுத்தமாதம் 3 ஆம் திகதி மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் ஆட்சி அமைதத பின்னர் ஜனாதிபதி சந்திரிகா மேற்கொள்ளவிருக்கும் இந்தியாவுக்கான முதலாவது விஜயம் இது வென்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்தியாவில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசாங்கம் ஆட்சியமைத்த பின்னர், இவர் அங்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயமும் இதுவாகும்.

இவர் தனது விஜயத்தின் போது ஜனாதிபதி, அப்துல்கலாம், பிரதமர் மன்மோகன் சிங் உட்பட பல உயர் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவதுடன் இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை நிறுவனம் நடத்தும் தலைமைத்துவ மாநாடொன்றிலும் உரையாற்றவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா தனது விஜயத்தின்போது இருநாடு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இணக்கப்பாடு ஏற்பட்டால் அடுத்தமாதம் கைச்சாத்து

(புதுடெல்கி)

**இந்திய – இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பாக ஆராய்ந்து இறுதி முடிவுகளை எடுப்பதற்காக இந்திய பாதுகாப்பு உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று இந்தவாரம் கொழும்புக்கு வரவுள்ளதாகத் தெரியவருகிறது.**

**கொழும்பில் இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அரசாங்கத் தலைவர்களுடன் உயர்மட்ட ஆலோசனைகளை நடத்தி பாதுகாப்பு உடன்படிக்கையில் முக்கிய அம்சங்கள் குறித்து இந்திய அதிகாரிகள் ஆராயவுள்ளனர்.**

ஏற்கனவே இந்தப் பாதுகாப்பு உடன்பாடு குறித்து பல்வேறு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருக்கின்ற போதிலும் சில குறிப்பிடத்தக்க விடயங்களில் இன்னமும் முடிவுகள் எடுக்கப்படவில்லை.

அனைத்து அம்சங்கள் குறித்தும் இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகளின் விஜயத்தின் போது கலந்துரையாடப்பட்டு - பாதுகாப்பு உடன்பாடு குறித்த இறுதிவடிவம் தயாரிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகர் - ஞானிமடத்தில் 2 எலும்புக் கூடுகள் மீட்பு

(கிளிநொச்சி)

பூநகரி - ஞானிமடப் பகுதியில் இரண்டு மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பெரும்போக நெல் விதைப்புக்காக விவசாயிகள் வயலை உழுதபோதே இந்த மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

இவற்றுடன் கனிப்பொருள் போன்ற பொருட்களும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரிப் பகுதியில் படையினர் முன்னர் நிலைகொண்டிருந்த போது கவலரண்களை நிறுவிய பகுதியிலிருந்தே இந்த எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

**நாளைய நமது ஈழநாட்டுடன் க.பொ.த. சாதாரண மாணவர்களுக்கான தமிழ் மொழியும் இலக்கியமும் மாதிரி வினாத்தாள் வெளிவரவுள்ளது. உங்கள் பிரதியை முகவரிடம் உறுதி செய்யுங்கள்.**

## புலிகளின் காவலில் இருந்த ஊர்காவற்படையினர் விடுதலை!



(திருகோணமலை)

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஊடுருவியவேளை, கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த ஊர்காவற்படையினர் இருவ்ரும் நேற்றிரவு 9.45 மணிக்கு கண்காணிப்புக்குழு முன்னிலையில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தன பண்டார, சமிந்த விஜேசிறி ஆகிய இருவருமே விடுவிக்கப்பட்டனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி திருகோணமலை கல்லம்பற்றை பகுதி ஊடாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் ஆயுதத்துடன் ஊடுருவியதாகத் தெரிவித்து இருவரும் கைதுசெய்யப்பட்டு திருகோணமலை மாவட்ட தமிழீழ நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரையும் விடுவிக்குமாறு வடகிழக்கு சிங்கள அமைப்பு, சுழற்சி முறையில் உண்ணாவிரதம் இருந்ததுடன் அரசும் கண்காணிப்புக்குழு ஊடாக கோரியிருந்தது.

எனினும், மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட 10 விடுதலைப்புலி உறுப்பினர்களும் விடுவிக்கப்பட்ட பின்னரே ஊர்காவற்படையினா இருவரும் விடுவிக்கப் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

## எழுவைதீவில் மருத்துவ முகாம்

தீவக சமாச சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் நடாத்தும் இலவச மருத்துவமுகாம் இன்று காலை 9.30 மணிக்கு எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சிகிச்சைமுகாமில் நீரிழிவு, குருதியமுக்கம், பல், பேன்கடி, பார்வைக்குறைபாடு, போன்ற நோய்களுக்கு சிகிச்சையளிக்கப்படும்.

## எழுதுநர்கள் இடமாற்றம்

பொது எழுதுநர் தரம் 1ஐச் சேர்ந்த மூன்று அலுவலர்கள் அடுத்த மாதம் முதல் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் இருந்து நவமணி, பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இருந்து ஆ. தங்கராசா, வி. சண்முகவடிவேல் ஆகியோரே இடமாற்றம் செய்யப்படவுள்ள உத்தியோகத்தர்களாவர்.

## 'இந்த வழியால் வாருங்கள்' தொலைக்காட்சி நாடகம்

யாழ்.பல்கலை திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் இன்று மு.ப 10 மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் அசோகாஹந்தகம இன் நெறியாழ்கையில் உருவான 'இந்த வழியால் வாருங்கள்' என்ற தொலைக்காட்சி நாடகத்தின் முதலாம் பகுதி வீடியோக் காட்சியாக காண்பிக்கப்படும்.

காட்சியின் இறுதியில் எழுத்தாளர்களான அ.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் காண்பித்த தொலைக்காட்சி நாடகம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் எவரும் கலந்து பயன்பெறமுடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஆனந்தசங்கரி எழுதிய கடிதத்துக்கு பொது அமைப்புக்கள் கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி நேற்று விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு அனுப்பிவைத்ததாக தெரிவித்து, ஊடகங்களுக்கு அனுப்பிய நான்கு பக்க கடிதத்துக்கு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஆறு பக்க கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: –

பத்திரிகைகளுக்கு அனுப்பிய கடிதம் கண்டு பெரும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். நீங்கள் என்னதான் எண்ணிக்கொண்டு இப்படிக் கேவலமாக நடந்துள்ளீர்கள்.

இந்தக்கடிதம் தமிழ்மக்கள் அனைவரையும் கோபம்கொள்ள வைத்துள்ளது. ஒவ்வொரு தமிழனும் கொதித்துப்போயுள்ளான். சீறி எழுந்துள்ள எமது மக்கள் இன்று சங்கரியாரைப் பார்த்து கேள்வி எழுப்புகிறார்கள்? ஒன்றல்ல இரண்டல்ல. இன்னும் பல....

ஆனந்தசங்கரி போன்ற ஆட்களால் தான் எமது இனத்தின் விடுதலை தள்ளிப்போய்க் கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும் என்று பல குரல்கள் தமிழர் தாயகத்தில் இருந்து கிளம்பியுள்ளது. இது குறித்து எம்மால் மௌனமாக இருக்க முடியவில்லை. எமது கடும் எதிர்ப்பை ஆனந்தசங்கரிக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.

தமிழீழ விடுதலைப்போராட்டம் பற்றியோ, தமிழ்மக்களின் உணர்வுகளைப் பற்றியோ, தமிழ்மக்கள் தங்களது இதய தெய்வமாகப் போற்றும் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் பற்றியோ புரிந்து கொள்ளாமல், தமிழ்மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத கடிதமொன்றை வெளியிட்டதற்கு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தனது வன்மையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழ் இனத்தின் இருப்பைப் பற்றியும், தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகள் பற்றியும். ஏதோ அதிகம் தெரிந்தவர்போல் அலட்டிக் கொள்ளும் சங்கரியே! உங்கள் அரசியல் அசிங்கத்தை ஒரு தடவை திரும்பிப் பாருங்கள்.

கடந்த பொதுத்தேர்தலில் கட்டுப்பணத்தைக் கூடப்பெறமுடியவில்லை. உங்கள் அரசியல் சாணக்கியம் என்னவென்று மக்களுக்குத் தெரியும். எதற்குமே அருகதையற்ற உங்கள் செயற்பாடுகளை இத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.

அரசியல் என்று நீங்கள் செய்யும் மோசடிகளும், வெளிநாடுகளுக்குச் சென்று தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராகச்செய்யும் தில்லுமுல்லுகளும் நாமறிவோம். தமிழ் தேசியத்தை வலுப்படுத்த கனடாவில் பொங்குதமிழ் பொங்கி பிரவாகித்தது. அந்தப் பொங்குதமிழைக் குழப்ப நீங்கள் எடுத்த பகீரதப்பிரயத்தனத்தை எம்மால் மறக்க இயலவில்லை. நீங்கள் அந்த முயற்சியில் தோற்றுப்போயுள்ளீர்கள்.

இது தமிழீழ தேசியத் தலைவரின் பின்னால், தமிழ்மக்கள் அனைவரும் அணிதிரண்டு நின்று விடுதலைக்குப் போராடும் காலம் என்பதனை ஏன் உணர மறுக்கிறீர்கள்.

இந்திய இராணுவம் இங்கு இருந்த காலத்தில் வடக்கு முழுவதையும் உன்னிடம் தருகிறேன் என அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸ கூறியபோது, அதனைத் தூக்கியெறிந்தார் தேசியத் தலைவர். அதனை சங்கரி ஐயா அறிந்திருந்தால் இவ்வாறான கருத்தை வெளியிட்டிருக்க மாட்டீர்கள்.

தமிழர் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை, கௌரவம், பாதுகாப்பு தொடர்பாகவோ அல்லது தமிழர்களது அரசியல் அபிலாஷைகள் தொடர்பாகவோ உங்களுக்கு அரசியல் முதிர்ச்சி இருந்திருந்தால் யதார்த்தத்திற்கு புறம்பான கருத்துக்களை வெளியிட்டிருப்பீர்களா?

ஆயிரமாயிரம் மாவீரர்கள் பெற்றுத்தந்த தமிழ்த்தேசியத்தைக் கூறுபோட எவருக்கும் உரிமைகிடையாது.

இன்று நாங்கள் சந்தேகப்படுகிறோம் - தமிழர் தாயகத்தை கூறுபோட கைக்கூலியாக செயற்படுகிறீர்களா? மாற்றான் வலையில் விழுந்து மண்ணுக்குத் துரோகம் செய்ய துணிந்து விட்டீர்களா? வேண்டாம் இனியும் துரோகத்தனம்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை புலிகளிடம் கையளிக்க வேண்டுமெனக் கடந்த பொதுத்தேர்தல் மூலம் மக்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். இதனைச் சர்வதேச சமூகமும் அங்கீகரித்திருக்கிறது. ஆதலால் பல வழிகளிலும் பலம் கொண்ட புலிகளிடம் தானே இடைக்கால அரசு கொடுக்கப்பட வேண்டும். இதில் மாற்றுக்கருத்துக்கே இடமில்லை. இதைவிடுத்து அரசு மாற்று யோசனை வைத்தாலும் அதனால் எதுவும் ஏற்படப்போவதில்லை. தமிழ் தேசியத்துக்கு வலுவூட்டக் கூடிய தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை தாங்கள் எதிர்ப்பதன் மர்மம் என்ன? இதனால்தான் நாங்கள் உங்கள் மீது சந்தேகப் படுகிறோம். நீங்கள் அந்நிய சக்திகளின் கைப்பொம்மையாகி தமிழினத்தைக் காட்டிக்கொடுக்கத் துணிந்து விட்டீர்கள் தமிழ் மக்கள் உங்களை மன்னிக்க மாட்டார்கள்.

கிழக்கு மாகாணம் பற்றி குறிப்பிட்டிருந்தீர்கள். ஏனைய இனத்தவர் சம எண்ணிக்கையில் வாழ்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும் இராணுவ ஆக்கிரமிப்பும்தான். இதனை நீங்கள் நியாயப்படுத்துகிறீர்களா? அல்லது உங்களுக்கு வரலாறு தெரியாதா? இந்த மண்ணில் நடந்த இன அழிப்பு பற்றி தெரியாதா? கொலைகளும் கொள்ளைகளும் நடந்தது தெரியாதா? திட்டமிட்ட ஒடுக்குமுறைக்கு ஆளாகி எமது இனம் அழிந்து சின்னாபின்னமாகி சிதறுண்டு போனது தெரியாதா?

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையானது தமிழ்மக்களால் தான் முன்வைக்கப்பட்டது என்பதை அறியவில்லையா? சர்வதேச நாடுகளில் வைத்துத்தானே நகல் வரையப்பட்டது. அது உங்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது.

அரசியலில் இருந்து மக்களால் துரத்தியடிக்கப்பட்ட தாங்கள் தமிழ் மக்கள் விரும்பாத கீழ்த்தரமான அறிக்கைகளை வெளியிட்டு, தமிழ் மக்களின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்க வேண்டாம். அது இன வாதிகளுக்கு தீனிபோடுவதாக அமையும்.

தங்களது அறிக்கைகள் பயனற்றவை. இதனை ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவுககு எம்மக்கள் இல்லை. தெளிந்த அரசியல் ஞானமும், விடுதலைவேட்கையும், பற்றுறுதியும் கொண்ட மக்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் தலைவனின் சொல்லுக்கு கட்டுப்படுவார்களே தவிர உங்களைப்போன்ற கைக்கூலிகளுக்குப் பணிந்துபோகமாட்டார்கள்.

தமிழீழப் போராட்டத்தை யார் அழிக்க நினைத்தாலும் அவர்களுக்கு சரியான பாடம் புகட்டப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கணிப்பீட்டு வேலைத்திட்டத்தில் புதிய நடைமுறைகள் அமுல்!

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் தற்போது நடைமுறையிலுள்ள பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடு வேலைத் திட்டத்தில் மாற்றம் கொண்டுவரப் பட்டுள்ளது. இதற்கான சுற்றுநிருபம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி அமைச்சின் செயலாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் தவணைக்கு செய்யவேண்டிய கணிப்பீடுகளின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது முன்னர் வாரத்தில் பாடவேளைகளின் எண்ணிக்கையின் இரு மடங்கு செய்யப்படவேண்டும். ஆனால, தற்போது படவேளைகளின் அளவு கணிப்பீடு செய்தால் போதுமானது.

இந்த வேலைத்திட்டத்தினை பாடசாலையில் வகுப்பறையில் நடத்துகையில் வேறுபட்ட பிரயோகச் சிக்கல்கள் ஏற்படுவதாக தெரியவந்ததை அடுத்தே மேற்படி மாற்றம் கொண்டு வரப்பட்டது. வகுப்பறையில் இவ் வேலைத்திட்டத்தை கூடிய வினைத் திறனுடனும் பயன்தரும் வகையிலும் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு ஏற்ற வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. (122)

## பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிக்க புதிய செயற்திட்டம்!

யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் இருந்து இந்தவருடம் க.பொ.த (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்காக பாடசாலையினால் விசேட செயற்திட்டம் ஒன்று நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச்செயற்திட்டத்தின் அடிப்படையில் இவ்வருடம் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு மதிப்பீட்டு பரீட்சைகள் நடத்தப்பட்டு மாணவர்கள் அடைவு மட்டத்திற்கு தகுந்தவகையில் வகைப்படுத்தப்பட்டு மாலை நேர விசேட வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

மாலை 2-30 மணிமுதல் 5-00 மணிவரை நடைபெறும் விசேட வகுப்புக்களில் அச்சடித்த குறிப்புக்கள் வழங்கப்படுவதுடன், விசேட பரீட்சைகளும் நடாத்தப்பட்டு மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தமாலை நேர வகுப்புக்களில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு மேற்படி வித்தியாலய பழைய மாணவர்களினால் தேனீர் வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது. (58)


## கண்ணீர் அஞ்சலி



### திருமதி புவிராஜா விசாலாட்சி

எமது நிறுவன இயக்குநர் அவர்களின் பாசமிகு தாயார் புவிராஜா விசாலாட்சி அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

844, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்
சுந்தர் வெளியீடு

(964)


## நகரசபைக்குச் சொந்தமான இடங்களிலிருந்து படையினர் உடனடியாக வெளியேற வேண்டும்!

### சாவகச்சேரி நகர அபிவிருத்திக்குழு கோரிக்கை

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் நகரசபைக்குச் சொந்தமான குப்பைகள் கொட்டும் இடத்தினையும், நகர விளையாட்டு மைதானத்தையும் உடனடியாக பொதுமக்களின் நன்மைகருதி படையினர் விடுவிக்க வேண்டுமென சாவகச்சேரி நகர அபிவிருத்தி புனரமைப்புக் குழுவினர் படைத்தரப்பிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் குப்பைகள் மற்றும் கழிவுகளைக் கொட்டுவதற்குப் பொருத்தமான இடம் இல்லாமையால் நகரசபையின் தொழிலாளர்களினால் நகர்ப் பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகள் கிராமப்புறங்களிலும் மயானப் பகுதிகளிலும் போடப்பட்டுவந்தது.

அண்மையில் இதற்கு அப்பகுதி பொதுமக்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள நகரசபைக்குச் சொந்தமான குப்பைகொட்டும் பகுதியினை விடுவிக்குமாறு நகர அபிவிருத்தி புனரமைப்புக்குழு படையினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது (122)

## யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு துன்னாலையில் இளைப்பாற்று மண்டபம்

(பருத்தித்துறை)

தேசிய வை.எம்.சி.ஏ அனுசரணையுடன் பருத்தித்துறை வை.எம்.சி.ஏயினால் துன்னாலை கலிகைச் சந்தியில் இளைப்பாற்று மண்டபம் ஒன்றினை அண்மையில் மனித உரிமைகளுக்கான பிராந்திய ஒருங்கிணைப்பாளர் ரி.சி.பிளவுன்சன் திறந்து வைத்தார்.

இந்த நிலையத்தில் சிறார்களுக்கான விளையாட்டு வசதிகள், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் நடைபெறவுள்ளது.

போரினால் சிதைக்கப்பட்ட பிரதேசங்களான வடமராட்சிப் பிரதேசங்களில் சிறார்களுக்கான எந்தவித பூங்காக்களோ, விளையாட்டு வசதிகளோ இல்லை. இதனால், சிறார்களின் மனநிலை பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் இருப்பதனால், சிறார்களின் நன்மை கருதி இந்த இளைப்பாற்று மண்டபம் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஏராளமான சிறார்கள் பங்குபற்றினர். அத்துடன் இந்த இளைப்பாற்று மண்டபத்தில் இப்பகுதிகளைச் சேர்ந்த சிறார்கள் பங்குபற்றிப் பயனடையலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (14)

## மூத்த எழுத்தாளர் மூவருக்கு கண்டியில் அஞ்சலிக்கூட்டம்!

கண்டி தமிழ்ச் சங்கமும், கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும் இணைந்து நடத்தும் மலையக இலக்கியத்துக்கு பெரும்பங்காற்றிய மூத்த எழுத்தாளர் மூவரின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு கண்டி விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மலையக கலை இலக்கிய பேரவையின் செயலாளர் அன்ரனி ஜீவா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலாத்தோயா கே. கணேசின் நினைவுரையை சமூக அபிவிருத்தி நிறுவன தலைவர் முத்துலிங்கமும்-

புலோலியூர் க.சதாசிவத்தின் நினைவுரையை ஞானம் இலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் டொக்டர் தி.ஞானசேகரனும் -

ஏ.பி.வி.கோமஸ்சின் நினைவுரையை மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கிய பேரவையின் செயலாளர் எம்.எம். பீர்முகமது ஆகியோர் நிகழ்த்துவர்.

## மனைப்பொருளியல் கண்காட்சி

யாழ்.மாவட்ட கூட்டுறச் சபையின் அனுசரணையுடன் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் மக்களின் அபிவிருத்தி பிரிவினால் நடத்தப்படும் மனைப்பொருளியல் கண்காட்சி நேற்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பமானது.

இந்தக் கண்காட்சி இன்றும் தொடர்ந்து நடைபெறுமென சங்கத் தலைவர் ந.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்றிய பயிற்சியாளர்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப்பொருட்கள் மலிவு விலையில் பொதுமக்களுக்கு விற்கப் படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.


நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான



ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் (ரீல்ஸ்) நடித்த

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00,10.00 (பு.நே)

நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய், சோனியா அகர்வால் நடித்த



(சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான

ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

7/G றெயின்போ காலனி

பு.நே 10.30, 2.30, 9.30 மட்டும்

ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்



(சி-2725)

# மங்கள சமரவீரவின் கருத்துக்கு புலிகள் தரப்பு கடும் அதிருப்தி!



(கொழும்பு)

கருணாகுழுவின் அரசியற் கட்சிதொடர்பாக, ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்டுள்ள கருத்துக் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் - கருணா குழுவின் அரசியற் கட்சி தொடப்பாகக் கருத்து வெளியிட்ட ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர,

கருணா அரசியல் நீரோட்டத்துக்கு வந்து, புதிய கட்சி ஆரம்பிப்பதை அரசாங்கம் வரவேற்கின்றது. அவரது கட்சியைப் பதிவுசெய்ய தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற் துறைசார்பில் கருத்து வெளியிட்ட ஒருவர் - அமைச்சரின் இந்தக் கருத்தானது, கருணாவுக்கு அரசாங்கத்தின் ஆதரவும், ஒத்துழைப்பும் இருப்பதாகக் காட்டுகிறது.

இந்தக் கருத்து அவருக்கு ஊக்குவிப்பாக அமைகிறது. பேரினவாதச் சக்திகள் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகளுக்கு இப்படியான ஒத்துழைப்பை வழங்குவது வழமை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இடைக்கால நிர்வாகம்
# புலிகளுக்கு வழங்கப்பட்டால் முஸ்லிம்களுக்கும் தேவையாம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்குவதானால், முஸ்லிம் மக்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்ற ஆலோசனையை எதிர்வரும் சில வாரங்களுக்குள் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதற்கு, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு ஆயத்தமாக உள்ளதாக, முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

அண்மையில், அமைச்சர் பௌசியின் இல்லத்தில் முதற்தடவையாகக் கூடிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பினரே இந்தத் தீர்மானத்தை எடுத்தனர்.

வடக்கு - கிழக்கு இன முரண்பாட்டுச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும்போது, தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகளுக்குச் சமனான சிறப்புரிமைகள் முஸ்லிம் மக்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படும்போது, முஸ்லிம் மக்களையும், பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில், பிரதிநிதிகளை அனுப்புவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதிகளின் அவசியம் ஏன் என்பது பற்றிய முப்பது பக்க அறிக்கையொன்றும், வெளிநாடுகள் பலவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி லண்டன், இந்தியா, நெதர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கே இந்த அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# நல்லிணக்கக் கூட்டம் மன்னாரில் நடைபெற்றது

அண்மையில் மன்னார் கரிசல் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் மன்னார் அரச செயலகத்தில் சமாதானத்துக்கான நல்லிணக்கக் கூட்டமொன்று இடம்பெற்றது.

கடந்த வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில், மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், கிஷோர், ரிசாத்பதியுதீன் மற்றும் மன்னார் பள்ளிவாசல்களின் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் வேற்றுமையை மறந்து, ஒற்றுமையை மேலோங்கச் செய்ய வேண்டுமென, இந்தக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் இவ்வாறு சமாதானத்துக்கான நல்லிணக்கக் கூட்டம் மாதாந்தம் கூடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (201)

# ஹெல உறுமய கட்சிக்குள் மேலும் மோதல் வலுக்கிறது

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளரான கொலன்னாவ சுமங்கல தேரர் கட்சியின் அனைத்துச் செயற்பாடுகளில் இருநதும் விலகியுள்ள நிலையில், கட்சியின் பொதுச் செயலாளரான உடுவே தம்மலோக தேரரும் கட்சிக்குள் எழுந்துள்ள முறுகலை தீர்க்கும் வகையில் - நேற்று முன்தினம் நடைபெற்ற மத்திய சபைக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இதனால், ஜாதிக ஹெல உறுமயவுக்குள் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை மேலும் வலுவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - ஜாதிக ஹெல உறுமய கட்சியில் சிஹல உறுமயவின் செல்வாக்கு களையப்பட வேண்டும் எனவும், அதன் பின்னரே கட்சியின் நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் எனவும் உடுவே தம்மலோக தேரர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக எதிர்வரும் புதன்கிழமை ஊடகவியலாளர் மாநாடாடொன்றைத் தான் தனியாக நடத்தவுள்ளதாகவும் அவர் அறிவித்தார்.

இந்த நிலையில் ஹெல உறுமயக் கட்சியின் கண்காணிப்பாளராகச் செயற்பட்டுவந்த மெனிக் என்ற வங்கி ஒன்றின் முன்னாள் தலைவரும், தமது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இவ்வாறான நிலையில் நேற்று முன்தினம் கூடிய ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய சபைக்கூட்டம் பெரும் குழப்பங்களுடன் முடிவடைந்தது.

இதேவேளை - சிஹல உறுமயவின் தலைவராக இருந்து, அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த திலக் கருணாரட்ண நேற்று முன்தினம் அந்தக் கட்சி யின் பண்டாரகம தேர்தல் தொகுதி அமைப்பாளராக உத்தியோகபூர்மாக பதவியேற்றார்.

இவர் ஜாதிக ஹெல உறுமய மற்றும் சிஹல உறுமய கட்சிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தொடர்பாக, விசேட அறிக்கை ஒன்றை வெளியிடப்போவதாக அறிவித் துள்ள நிலையில், இரு கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகள் மேலும் அதிகரிக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## ரயில்வே அதிகார சபை விரைவில் கலைப்பு

ரயில்வே அதிகார சபையை ரத்துச் செய்யும் சட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தவும், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும், அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1993 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்மூலம் ரயில்வே அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டது. எனவே, அதனை மற்றொரு சட்டத்தின்மூலமே ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

# முஸ்லிம் காங்கிரசுடன் நு - ஆவை இணைப்பதற்குப் புதிய முயற்சிகள்!

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் தேசிய ஐக்கிய முன்னணியையும் இணைக்கும் முதற் கட்ட நடவடிக்கையாக எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமையன்று நிந்தவூரில் சமரச விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிந்தவூரில் உருவாக்கப்பட்டுள்ள ஸ்காத் நகர அபிவிருத்தி திட்டம் எதிர்வரும் சனிக்கிழமை அமைச்சர் பேரியல் அஷ்ரப்பினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மறைந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எம்.எச். எம்.அஷ்ரப்பின் பிறந்த தினமாகிய அன்றைய தினம் இரு கட்சிகளையும் மீண்டும் இணைக்கும் நாளாக ஏற்பாட்டாளர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

தேசிய ஐக்கிய முன்னணி தலைவியும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக தேசிய ஐக்கிய முன்னனியின் பிரதி தலைவரும் பிரதி அமைச்சருமான சேகு இஸ்ஸதீன் கருத்து தெரிவிக்கையில் -

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுகாண விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்றும், தமது கட்சியின் நிலைப்பாட்டை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போது ஏற்றிருப்பது ஒரு திருப்புமுனை எனத் தெரிவித்தார்.

## அனைத்துப் பல்கலைக்கழக
# கல்விசாரா ஊழியர்கள் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில்!

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செப்ரெம்பர் மாதம் முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுவந்த அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதாக உறுதியளிக்கப்பட்ட போதிலும், இதுவரையும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று, அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும் வரைக்கும் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுதியளித்துள்ள போதிலும், இதுவரை அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என்றும் தொழிற்சங்கக் கூட்டமைப்பு கவலை தெரிவித்துள்ளது. இதனால், மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று தொழிற்சங்கத்தின் முக்கியஸ்த்தர் ஒருவர் தெரிவிததார். (தே)

## கண்ணிவெடி தவிர்ப்பு உடன்பாட்டில்;
# அரசு – புலிகள் தரப்பினரை கைச்சாத்திட வலியுறுத்து!

(கொழும்பு)

அரசாங்கமும் - விடுதலைப் புலிகளும் நிலக் கண்ணி வெடிகளைப் பயன்படுத்துவதை முற்றாக கைவிடுவது தொடர்பான இருதரப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும் என்று இலங்கை கண்ணிவெடி எதிர்ப்பு இயக்கம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதாக அந்த இயக்கத்தின் பேச்சாளர் மாதம்பாகே அஸ்ஸஜி தேரர் தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தி நேரம் ஒதுக்கித் தருமாறு விடுதலைப் புலிகளிடம் உத்தியோக பூர்வமாகக் கோரிகைகை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - நிலக் கண்ணிவெடிப் பாவனையை எதிர்ப்பது தொடர்பான ஒட்டாவா உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கம் இதுவரையில் கைச்சாத்திடவில்லை.

அத்துடன், உலகின் தீவிரவாத இயக்கங்கள் நிலக் கண்ணிவெடிப் பாவனையை ஜெனீவா கோட் எனப்படும் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது குறித்துப் புலிகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக மௌனம் காத்துவருவது குறித்தும் அவர் கவலை தெரிவித்தார். தீவிரவாத இயக்கம் என்பதை ஏற்றுக்கொண்டு இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட புலிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

இதனாலேயே இலங்கையில் நிலக்கண்ணிவெடிப் பயன்பாட்டை முற்றாகத் தடுக்கும் நோக்கத்துடன் அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இருதரப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது குறித்து இருதரப்பினருக்கும் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொது மன்னிப்பு காலத்தில்
# சட்டவிரோத ஆயுதங்கள் கையளிக்கப்படவில்லை

(கொழும்பு)

சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்கென, அரசாங்கத்தால் கடந்த முதலாம் திகதி முதல் செயற்படுத்தப்பட்டுள்ள பொதுமன்னிப்பு காலப்பகுதியில் எந்தவொரு ஆயுதமும் இதுவரை கையளிக்கப்படவில்லையெனப் பொலிஸ் திணைக்களம் தெரிவித்தன.

நாட்டில் சுமார் 30 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் பாவனையில் உள்ளதாகப் பொலிஸ் தலைமையகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் மற்றும் பாதாள உலக கோஷ்டியினரிடம் இந்த ஆயுதங்கள் உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (தே)

## புதிய அரசியற் கட்சிப் பதிவு
# உள்ளூராட்சி தேர்தலுக்கு முன் சாத்தியமே இல்லையாம்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாகத் தீர்மானம எடுக்கும் வரை எந்தவொரு புதிய அரசியல் கட்சியையும் பதிவு செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏதாவது ஒரு தேர்தலை நடத்துவதற்கு ஆயத்தங்கள் செய்த பின்னர், புதிய அரசியற்கட்சிகளைப் பதிவு செய்வதற்குத் தேர்தல் சட்டத்தில் இடமில்லை.

2002 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், வேட்பாளர் நியமனங்கள் கோரப்பட்ட பின்னர், விடுதலைப் புலிகள் காட்சிய எதிர்ப்பால், தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

எனவே, இந்தத் தேர்தல் முடியும்வரை, எந்தவொரு புதிய கட்சியையும் பதிவு செய்ய முடியாதென தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், புதிய கட்சி ஒன்றைப் பதிவு செய்யவேண்டும் என்றால், தேர்தல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார். (தே)

இந்தியாவுடனான டெஸ்ட்

# 2 ஆவது இனிங்ஸில் அவுஸ்ரேலியா 4 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்கள்!



(சென்னை)

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக் கிடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் - அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 235 ஓட்டங்களில் ஆட்டமிழந்த பின்னர், முதல் இனிங்ஸை விளையாடிய இந்தியா 2 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 291 ஓட்டங்கள் எடுத்திருந்தது. முகமட் கைஃவ், 34 ஓட்டங்களுடனும் பார்த்திவ் பட்டேல் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று மூன்றாவது நாள் ஆட்டத்தில் கைஃவ், பார்த்திவ் பட்டேல் இருவரும் தொடர்ந்து விளையாடினார்கள். இருவரும்



மிகவும் பொறுப்புடன் ஆடி ஓட்டங்களை எடுத்தனர். இந்திய அணி 103.5 ஆவது ஓவரில் 300 ஓட்டங்களைத் தொட்டது.

கைஃவ் முதலில் அரைச் சதத்தைத் தொட்டார். 130 பந்துகளில் 5 பவுண்டரியுடன் 50 ஓட்டங்களை எடுத்தார். அவரைத் தொடர்ந்து பார்த்திவ் பட்டேல் அரைச்சதம் அடித்தார்.

மிகவும் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த பார்த்திவ் பட்டேல், வோன் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். அவர் 121 பந்துகளில் 8 பவுண்டரியுடன் 54 ஓட்டங்களை எடுத்தார். அப்போது இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை 335 ஓட்டங்களாக இருந்தது. கைஃவ் - பட்டேல் ஜோடி ஏழாவது விக்கெட்டுக்கு 39.4 ஓவர்களில் 102 ஓட்டங்களை எடுத்தமை, இந்த டெஸ்ட்டில் முக்கிய அம்சமாகும். இந்த ஜோடியால்தான் இந்திய அணியின் ஓட்டங்கள் அதிகமானது. 8 ஆவது விக்கெட்டுக்கு கைஃவுடன், கும்ளே ஜோடி சேர்ந்தார்.

மதிய உணவு இடைவேளையின்போது இந்தியா 7 விக்கெட் இழப்புக்கு 363 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கைஃவ் 60 ஓட்டங்களுடனும், கும்ளே 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். மதிய இடைவேளைக்கு பின்னர் ஆட்டம் தொடங்கியதும் கைஃவ் களம் இறங்கவில்லை. காயம் காரணமாக அவர் ஆடவரவில்லை. இதனால் ஹர்பஜன் சிங் களமிறங்கினார். வோனின் பந்துவீச்சில் கும்ளே (20), ஹர்பஜன்சிங் (5) ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தனர்.

கடைசியாக சகீர்கானுடன், காயம் அடைந்த கைஃவ் ஜோடி சேர்ந்தார். வோனின் பந்தை பவுண்டரிக்கு விளாசினார். அடுத்த பந்துவீச்சுக்கு முகம்கொடுத்த அவரால் ஓட முடியாத நிலை ஏற்பட்டதால் 'ரன் அவுட்' ஆனார். மைதானத்தில் இருந்து கைஃவ்வை அகார்கர், முரளி கார்த்திக் ஆகியோர் கைத் தாங்கலாக அழைத்து சென்றனர். கைஃவ் 158 பந்தில் 6 பவுண்டரியுடன் 64 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்திய அணி 134.3 ஓவர்களில் 376 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இது அவுஸ்ரேலியாவின் முதல் இனிங்சைவிட 141 ஓட்டங்கள் கூடுதலாகும். வோன் 125 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.



141 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் அவுஸ்ரேலியா 2வது இனிங்ஸை ஆடியது. ஹெய்டனும், லாங்கரும் நிதானமாக விளையாடி வந்தனர். லாங்கர் 19 ஓட்டத்தில் கும்ளேயின் பந்துவீச்சில், டிராவிட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அதனை தொடர்ந்து அவுஸ்ரேலிய கப்டன் கில்கிறிஸ்ட் களமிறங்கினார்.

இருவரும் நிதானமாக ஒவ்வொரு ஓட்டமாக அடித்து வந்தனர். 39 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கும்ளேயின் பந்தில் லக்ஷ்மனிடம் பிடி கொடுத்து ஹெய்டன் பெவிலியன் திரும்பினார். முதல் இரண்டு விக்



கெட்டையும் கும்ளே கைப்பற்றினார்.

அடுத்து கில்கிறிஸ்டுடன் கடிச் ஜோடி சேர்ந்தார். கடிச் 9 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சகீர்கான் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அப்போது அவுஸ்ரேலியா 3 விக்கெட் இழப்பிற்கு 121 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அடுத்து 4 ஆவது விக்கெட்டிற்கு கில்கிறிஸ்டுடன் மார்ட்டின் ஜோடி சேர்ந்தார். இருவரும் நேற்றைய ஆட்டம் முடியும்வரை ஆட்டமிழக்காமல் இருக்கவேண்டும் என்ற நிலையில் நிதானமாகவும், கவனமாகவும் விளையாடிக்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் கில்கிறிஸ்ட் ஆட்டம் முடிவதற்கு முந்தைய ஓவரில் 49 ஓட்டங்களில் கும்ளேயின் பந்தில் போல்ட் ஆனார். அதனைத் தொடர்ந்து இரவுப் பாதுகாவலராக ஜிலெஸ்பி களம் இறங்கினார்.

மார்ட்டின் 19 ஓட்டங்களுடனும், ஜிலெஸ்பி ஓட்டங்கள் ஏதும் எடுக்காமலும் களத்தில் உள்ளனர். நேற்று கும்ளே சிறப்பாக பந்து வீசி 3 விக்கெட் கைப்பற்றினார்.

யாழ். கோட்ட

## உதைபந்தாட்டப் போட்டியில் சென்ஜேம்ஸ் சம்பியன்!

யாழ்.வலயத்துக்கு உட்பட்ட யாழ். கோட்ட பாடசாலைகளிடையே கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் -

சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும், சென். ஜோசப் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், புனித பத்திரிசியார் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்று வலயமட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளன. (58)

சிநேகபூர்வ

## உதைபந்தாட்டப் போட்டிகளில் சென் பற்றிக்ஸ் அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளிடையே நடைபெற்று வரும் சிநேகபூர்வ உதைபந்தாட்ட தொடரில் 4 பிரிவுகளிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி கொண்டது.

கடந்த வெள்ளிக்கிழமை புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி உதைபந்தாட்ட போட்டிகளில் சிறுவர் பிரிவில் 2:0 என்ற கணக்கிலும், 3 ஆம் பிரிவில் 2:1 என்ற கணக்கிலும், 2 ஆம் பிரிவில் 9:0 என்ற கணக்கிலும், 1 ஆம் பிரிவில் 3:0 என்ற கணக்கிலும் இலகுவாக சென். பற்றிக்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியை வெற்றி கொண்டது. (58)

## கிறெம்ளின் கிண்ண ரெனிஸ் வீனஸை எலினா வென்றார்!



மொஸ்கோவில் கிறெம்ளின் கிண்ணத்துக்கான ரெனிஸ் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் முதலில் நடந்த போட்டியில் ரஷ்ய வீராங்கனை எலினா போவினா 6-3, 6-2 என்ற நேர் செட்களில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்சை வீழ்த்தினார்.




பாக்ரெல் முக்கோண இறுதிப் போட்டியில்

# 119 ஓட்டங்களால் இலங்கை பாகிஸ்தானைத் தோற்கடித்தது



(லாகூர்)

பாக்ரெல் முக்கோண ஒருநாள் தொடரின் இறுதியாட்டத்தில் 119 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்து இலங்கை அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நேற்று லாகூரில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பாகிஸ்தான் அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று - முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இலங்கை அணி முதல் விக்கெட்டை எந்த ஓட்டமும் பெறாத நிலையில் இழந்தது. ஆட்டமிழந்து சென்ற ஜெயந்தவுக்குப் பதிலாக களமிறங்கிய. அத்தபத்து நிதானமாக நின்று ஆடினார். எனினும், ஜயசூரிய 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றதால் இலங்கை அணி அதிர்ச்சிக்குள்ளானது.

ஆயினும் அடுத்து வந்த சங்ககார நிதானமாகவும், அதிரடியாகவும் ஆடி ஓட்டங்களைக் குவித்தார். அத்தபத்து 66 ஓட்டங்களில் ஆட்டமிழந்து செல்ல ஜெயவர்த்தன களமிறங்கினார்.

மறுமுனையில் அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த சங்ககார 68 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சென்றதால், டில்சான் களமிறங்கினார். ஆயினும் அவர் 39 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்ததால் உபுல் சந்தன களமிறங்கினார். அவரால் 7 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

ஜெயவர்த்தனவும், 49 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால் - சமிந்தவாஸ், மஃரூப் ஆகியோர் களமிறங்கி முறையே 18, 2 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர்.

50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 7 விக்கெட் இழப்புக்கு 287 ஓட்டங்களைக்



குவித்தது.

பந்துவீச்சில் அப்ரிடி 2, ஹசன், சமி, மலிக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

அடுத்துத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நிதானமாக ஆடியபோதும், ஜெயசூரிய, சந்தன ஆகியோரின் அபாரமான பந்து வீச்சால் அடுத்தடுத்து விக்கெட்டுக்களைப் பறிகொடுக்க நேர்ந்தது.

சல்மான் பட் - 40, யாசிர் ஹமித் - 18, மலிக் - 37, இன்சமாம் - 4, யுகானா - 7,



மொய்ன்கான் - 14, அப்துல் ரசாக் - 8, அப்ரிடி - 11, சமி - 4, அக்தர் - 0 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

ஹசன் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். 38 ஆவது ஓவரில் பாகிஸ்தான் அணி 168 ஓட்டங்களை மட்டுமே பெற்று 119 ஓட்டங்களால் தோல்வி கண்டது.

பந்துவீச்சில் ஜெயசூரிய 5, சந்தன 3, வாஸ், பெர்னாண்டோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மகாஜன சபை கலைஞர் வட்ட நவராத்திரி தின கலை விழா

அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டம் நடத்தும் நவராத்திரி தின கலை விழா இன்று நடைபெறவுள்ளது.

கலைஞர் வட்டத் தலைவர் வை.விஜயபாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலை நிகழ்வில், அளவெட்டிப் பகுதி முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி தரம் 4 மாணவர்கள் பங்கேற்கும் பட்டிமன்றம், கலாவித்தகர் சி.சிவஞானராசாவின் இன்னிசையரங்கு மகாஜனா சபைக் கலைஞர் வட்டத்தினரின் பட்டிமன்றம், இணுவில் அம்பலவாணர் கலையரங்கத்தினரின் தெய்வமலர் சமூக நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை கலைஞர் வட்ட பொருளாளர் பா.பிரதீபனும், சிறப்புரையை மகாஜன சபை தலைவர் வை.சுப்பிரமணியமும், நன்றியுரையை கலைஞர் வட்ட செயலாளரும் வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மகாஜன சபை கலைஞர் வட்டத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(94)

## திறப்பு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(வடமராட்சி)

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், கலாசார மண்டபத்திறப்பு விழாவும் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.





யாழ். லயன்ஸ் கழகத்தால் யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் சர்வ தேச வெள்ளைப் பிரம்புதினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் உரையாற்றிய விழிப்புலனற்றோர் சங்கத்தின் உறுப்பினர் அ.மகேந்திரன் உரையாற்றுவதையும் இதில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம்.

# கலைஞர்களை ஊக்குவிப்பது தமிழரின் தவிர்க்க முடியாததேவை

## பேராசிரியர் சண்முகலிங்கன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கவிஞன் மனிதத்தை நேசிப்பவனாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அவனது படைப்புகள் மனித வாழ்வை ஊடுருவி நிற்கும்.

இந்த நூலில் கவிஞரின் ஆளுமையோடு இனிய கவிதைக் கோலங்களும் பரவிக்கிடக்கின்றன. இது ஆரோக்கியமான படைப்பிலக்கிய எதிர்காலத்தின் அறிகுறியாகும் என, பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

பாசையூர் முதுபெரும் கவிஞரான மு.சிங்கராயர் எழுதிய 'மடு அன்னை பிள்ளைத்தமிழ்' நூல் வெளியீட்டு விழாவில் நயப்புரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். கொழும்புத்துறை சவேரியார் குருத்துவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற விழாவுக்கு, கல்லூரியின் அதிபர் அருட்கலாநிதி எஸ்.வீ.பீ.மங்களராசா அடிகள் தலைமை தாங்கினார்.

பிரதம விருந்தினராக உரையாற்றிய யாழ். பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் -

எம்மிடமுள்ள வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து - எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் ஊக்குவிப்பது தமிழ் சமூகத்தின் தவிர்க்க முடியாத பணியாகும்.

இந்தப் பணியை நாம் நிறைவேற்றாதுவிட்டால், காலம் எம்மீது பழி சுமத்தும் எனத் தெரிவித்தார்.

அருட்திரு ம.போல் நட்சத்திரம் அடிகளார் ஆசியுரையையும், கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆய்வுரையையும் நிகழ்த்தினர்.

(206)

## வாணி விழா

(உடுவில்)

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினர் வாணிவிழாவை இந்தவருடம் வெகுசிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த மன்றத்தால் நடத்தப்படுகின்ற பாலர் பாடசாலை மாணவர்களிடையே - பேச்சு போட்டி, திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் மனனப்போட்டி, பண்ணிசைப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்த போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறும் மாணவர்களுக்கு நாவலர் விழாவின் போது பரிசில்கள் வழங்கப்படும் என அறிவித்துள்ளனர்.

(101)

# விஜயதசமி தினத்தன்று விசேட ஆங்கில வகுப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி மக்கள் நலன் சேவைச் சங்கத்தால் எதிர்வரும் 23 ஆம் திகதி விஜயதசமி அன்று இலவச விசேட ஆங்கில வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு - சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியில் அமைந்துள்ள தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு காலை 9 மணியளவில் கலவித் துறைசார்ந்த பெரியோர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.

இதில் ஒவ்வொரு தரத்தினருக்கும் ஏற்றபடி, வகுப்புக்கள் தரம் பிரிககப்பட்டு நடத்தப்படவுள்ளன.

தொடர்ந்து கணினிக்கற்கை நெறிக்கான வகுப்புக்களும் இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாக தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

## பதவியுயர்வு பரீட்சைக்கு

# சுகாதார சேவைகள் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப வைத்திய உத்தியோகத்தர்களுக்கும், பல் சத்திரசிகிச்சை உத்தியோகத்தர்களுக்குமான பதவி உயர்வுகளுக்குரிய திணைக்களப் பரீட்சைக்கு, சுகாதார சேவைகள் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

சுகாதார சேவையிலுள்ள ஆரம்ப வைத்திய உத்தியோகத்தர்களையும், பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களையும் தரம்-11 க்கு பதவி உயர்த்துவதற்காக, தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சைகள் அடுத்த மாதம் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதுவரை இந்தப் பரீட்சையைப் பூரணப்படுத்தாத, ஆரம்ப தரத்தில் உள்ள வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் பல் வைத்திய உத்தியோத்தர்கள் மட்டுமே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் இந்த மாதம் 26 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை இம்மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் பார்வையிட முடியும்.

(31)

## செங்குந்தா பொதுச்சந்தை

# உட்பகுதி கட்டுமானத்துக்கு அரச அதிபர் நிதி ஒதுக்கீடு

நல்லூர் செங்குந்தா பொதுசந்தையின் உட்பகுதிகளில் கட்டுமானப் பணிக்கென யாழ். அரச அதிபரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

தற்போது நல்லூர் செங்குந்தா பொதுச்சந்தைக்கு முன்புறம் கடைத் தொகுதியொன்று கட்டப்பட்டு, நேற்று முன்தினம் பொதுமக்களின் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.

ஆனால், இந்தச் சந்தையின் உட்பகுதியானது திருத்தவேலையுடன் சீரற்றுக்காணப்பட்டதையடுத்து, இது தொடர்பாக யாழ். அரச அதிபருக்கு தெரியப்படுத்தியதன் பயனாக - இதற்கான நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நல்லூர் பிரதேச செயலர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

விரைவில் இந்தச் சந்தையின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வீதி விளக்குகளை பொருத்துதல் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகளைப் பொருத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பலவீதிகளில் மின்விளக்குப் பொருத்த வேண்டியிருக்கின்ற போதிலும், குறிப்பிட்ட ஒரு தொகைப்பணமே ஒதுக்கப்பட்டிருப்பதால், அவசியமாக - மக்கள் போக்குவரத்து வீதிகளுக்கு மின் விளக்கு பொருத்துவது தொடர்பாக ஆராயவே, இக்கூட்டம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## ஆங்கில வகுப்புக்கள்

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தால் நடத்தப்படுகின்ற பாலர் வகுப்பு மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யுமுகமாக, ஆங்கில வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் இந்த வகுப்புகளில் சேர விரும்பும் - ஆண்டு ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்களும், வேறு பாலர் பாடசாலை வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களும் இந்து இளைஞர் மன்ற செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(101)

## யாழ். மாவட்டத்தில் —

# மூன்று கிராமங்களில் வாழும் வறிய மக்களுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

அரசியல் அமைப்பு - மறுசீரமைப்பு அமைச்சால், யாழ்.மாவட்டத்திலுள்ள மூன்று கிராமங்களில் வாழும் வறிய குடும்பங்களுக்கு உதவுவதற்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழும் குடும்பங்களை உள்ளடக்கிய மூன்று கிராமங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவற்றில் வாழும் வறிய குடும்பங்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சின் இணைப்பாளர் பரமகுரு மாலினி தெரிவித்தார்.

மானிப்பாயின் தேராந்தோட்டம், வடமராட்சியின் கப்பூது கிராமம் மற்றும் பல்லசிட்டி முதலான கிராமங்களே தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

அங்கு வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு உணவல்லாத உதவிப் பொருட்களான நுளம்புவலை, தண்ணி வாளி, விளக்கு, கூரைவிரிப்பு உள்ளிட்ட பொருட்களே வழங்கப்படவுள்ளன.

இதற்காக கப்பூது கிராமத்துக்கு 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், பல்லசிட்டிக் கிராமத்துக்கு 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், தேராத் தோட்டத்துக்கு 3 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ஜெ.ஜெனுக்ஷி
முகவரி : வத்தளை.

இரண்டாவது அகவையில்



பெயர் : த.சாலினி
முகவரி : இராசா வீதி, அச்சுவேலி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்



# விளையாட்டு அரங்கம்



## தீர்ப்புக்களைத் திருத்தி எழுதுங்கள்

இந்திய அவுஸ்ரேலிய முதல் டெஸ்ட் போட்டியில் வீரேந்திர ஷேவாக் தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்புப்பற்றி நடுவருடன் வாதம் செய்ததால் அவருக்கு இரண்டரை இலட்சம் இலங்கை ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அதாவது பிழைவிட்ட நடுவரை ஏன் இந்தப் பிழையை விட்டீர்கள் என்று சரியான காரணத்தைக் கேட்டவருக்கு அபராத மென்றால், பிழை விட்டவருக்கு விதிக்கப்படப்போகும் அபராதம் தான் என்ன?

இப்படித்தான் இந்த நடுவர்களின் பிழையான தீர்ப்பால் எத்தனை வீரர்களின் சாதனைகள் பறிபோனதுடன், அவர்சார்ந்த அணியையும் வேதனையான முடிவுக்குக் கொண்டு சென்றது.

நடுவரின் தீர்ப்பை எதிர்த்து மைதானத்தில் வீரர் ஒருவர் தர்க்கம் செய்வது ஐ.சி.சி. யின் விதிமுறைகளுக்கு முரணானதென்றால் அந்த வீரர் பாதிக்கப்படுவதற்கு காரணமாக இருந்த நடுவர்கள் மீது இதுவரை I.C.C எடுத்த நடவடிக்கைகள் தான் என்ன? என்று ஆராய்ந்தால் கிடைக்கும் விடை பூச்சியம்தான்.



ஷேவாக்

நடுவரின் தீர்ப்பென்பது கடவுளின் வரமல்லவே. கொடுத்தால் திருப்பி வாங்குவதற்கு இது தனிமனிதர் ஒருவரின் முடிவு. எனவே, தான் பிழையான தீர்ப்பை வழங்கிவிட் டேன் என உடனடியாகத் தெரிந்தவுடன் மற்றைய அணித் தலைவருடன் கலந்துரையாடி தன்னால் பாதிக்கப்பட்ட வீரருக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கினால் கௌரவம் குறைந்து விடுமா என்ன?

மைதான நடுவர் தன்னால் எடுக்க முடியாத முடிவு களை மூன்றாவது நடுவரிடம் விட்டு அவர் தெரிவிக்கும் தீர்ப்பை வழங்குகின்றார். இதில் அனேகம் "ரன் அவுட்" தொடர்பிலேயே நடைபெறுவது வழக்கம். ஏன் மற்ற ஆட்டமிழப்புக்களிலும் தமக்கு சந்தேகம் என்று தெரிந்தால் மூன்றாவது நடுவரிடம் கேட்டால் இவர்கள் என்ன குறைந்தா போய்விடுவார்கள்?

இதில் ஒரு உதாரணத்தைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இந்த வருடம் இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் கொழும்பில் நடந்த போட்டி யொன்றில், கில்கிறிஸ்டிற்கு பிழையான அவுட் நடுவரால் கொடுக்கப்பட்டது. ஆனா லும், நடுவர் தனது பிழையை உடனடியாகவே உணர்ந்து இலங்கை அணித்தலை வரான அத்தபத்துவிடம் கலந்துரையாடிய போது, அவரும் கில் கிறிஸ்ட் தொடர்ந்து விளையாட சம்மதித்தார்.

இதில் நடுவரின் தீர்ப்பு பிழையானதென்பதனை அறிந்த அத்தபத்து, கில் கிறிஸ்டை தொடர்ந்து விளையாட சம்மதித்தார் . இப்படியான எத்தனை சந்தர்ப்பங்களில் நடுவர்கள், துடுப்பாட்ட வீரர் பாதிக்கப்படாத முடிவைத் துணிந்து எடுத்திருக்கிறார்கள்?

இதில் இந்திய அணியின் முன்னாள் வீரர் ஸ்ரீகாந்த் என்ன கூறுகிறார் என்றால்- மோசமான ஆட்டத்தை அண்மைக் காலமாக வெளிப்படுத்தி வரும் ஒருவர், தனக்கு கிடைத்த இந்த வாய்ப்பை பயன்படுத்துவோம் என்று நினைத்தால் அது நடுவரின் தீர்ப்பால் பாழாய்ப்பப் போய் விடுகின்றது. எனவே இயல்பாகவே அந்த வீரருக்கு கோபம் வருவது நியாயமானது. ஷேவாக்கின் நிலையில் நான் இருந்தால் அவர் செய்ததையே நானும் செய்திருப்பேன் என்கிறார்.

அதுபோக ஒரு போட்டி முடிவடைந்த தும் நடுவர்கள் விட்ட பிழைக்காக I.C.C அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுத்ததா என்றால் அதுவும் இல்லை. ஆகவே நடுவர்களின் இவ்வாறான செயற்பாடு கள் தொ டரத்தான் போகின்றது.

– யசோ.

## தேடிவரும் பசுமைகள்

இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் 2005 ஆம் ஆண்டு ஜுலை வரை இங்கிலாந்து கவுண்டிகளில் ஒன்றான லங்காஷயர் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அவ்வாறே ஸ்கொட்லாந்தின் சால்டயர்ஸ் கவுண்டி அணியும் ஜெயசூரியவை அணியில் சேர்த்துக் கொள்வதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. இந்த அணிக்காக சென்ற வருடம் ராகுல் ட்ராவிட் ஒப்பந்தமாகி விளையாடிய மையும் குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட் வீரர்கள் தங்கள் அணிக்கு சர்வதேச தொடர் எதுவும் இல்லாத காலப் பகுதிகளில் தங்களுடைய துடுப்பாட்ட மற்றும் பந்து வீச்சு நிலைகளைத் தொடர்ந்தும் ஒரே சீராகப் பேணிக்காத்திட, வெளிநாட்டு கவுண்டி அணிகளில் விளையாடச் செல்வது நீண்ட காலமாக நடந்து வருகின்ற ஒரு விடயம் தான். இவ்வாறு செல்வதன் மூலம் வெளிநாட்டுப் பயிற்சியாளர்களின் பல்வேறு விளையாட்டு நுணுக்கங்களை கற்றுக் கொள்வதற்கும் இது




வாய்ப்பாகின்றது. இவை எல்லாவற்றையும் விடத் தலையாய காரணம் கவுண்டி அணிகளால் அள்ளிக் கொடுக்கப்படும் வெள்ளிப்பணம்.

இதற்கு சிறந்த உதாரணம் -

சிம்பாப்வே அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும் ஆரம்பப் பந்து வீச்சாளருமான நீல் ஜோன்ஸன் . இவர் சிம்பாப்வே கிரிக்கெட் சபையுடன் ஊதிய உயர்வு கோரி முரண்பட்டு, சொந்த நாட்டை மறந்து, அவுஸ்ரேலியா வின் பிராந்திய அணிக்கு விளை யாடச் சென்றமை இதனை உறுதிப்படுத் தவே செய்யும்.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில் முரளியினுடைய கிரிக்கெட் வாழ்க்கையின் ஆரம்பக்கட்டத்தில் அவரின் பந்து வீச்சை தவறானது எனக் கூறியவர்களில் முன்னிலை வகித்தவர் கள் அவுஸ்ரேலியர்களும் இங்கி லாந்துகார்களும் தான். அதிலும் குறிப்பாக அவுஸ்ரேலியாவின் நடுவர் டரெல் ஹெயரும், இங்கிலாந்து அணியின் முன்னாள் பயிற்சியாளரான டேவிட் லொயிட்டும் தவிர்க்க முடியாதவர்கள்.



முரளிதரன்
வாராய் நீ வாராய்

சர்வதேச தொடரில் முரளிதரன் பந்து வீசும் போது தவறானது எனக் கூறும் இந்த வெள்ளைக்காரத் துரைமார்கள், கவுண்டி அணிகளில் மட்டும் முரளிதரனைச் சேர்த் துக் கொள்வதற்காக வரிசை கட்டி நிற்பது தான் விநோதமான செயலாகும்.

இவை ஒருபுறமிருக்க 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கிலாந் தின் கென்ட் கவுண்டி அணிக்காக விளையாட ஒப்பந்தமானவர் இந்தியாவின் ராகுல் ட்ராவிட் இதேகாலப் பகுதியில் கென்ட் அணிக்கு பயிற்சியாளராக இருந்தவர் தான், இப்போதைய இந்திய அணியின் பயிற்சியாளர் ஜோன்ரைட். 2000ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் இந்திய அணிக்குப் புதிய பயிற்சியாளராக யாரை நியமிக்கலாம் என்று கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை யோசித்த வேளையில் தான் - ராகுல் ட்ராவிட், ஜோன் ரைட்டின் பயிற்சி பற்றியும், விளையாட்டு நுணுக்கம் பற்றியும் எடுத்துக் கூறி அவரைப் பயிற்சியாளராக நியமிக்க செய்ததில் பெரும் பங்கு வகித்தார் என்பதும் ஒரு சுவையான தகவல்.

அத்துடன் ஜெப்றி பொய்கொட்டின் பிராந்திய அணியான யோக்ஷயர் அணியில் வெள்ளை இனத்தவர்கள் மாத்திரமே விளையாடுவது வழக்கம். ஆனால், முதன் முறையாக 1990/91 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சச்சின் டெண்டுல்கர் ஒப்பந்தமாகியதன் மூலம் இந்த அணிக்காக விளையாடிய வெள்ளையர் அல்லாத வெளிநாட்டவர் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டதும் இன்னொரு சுவாரஸ்யமான தகவல்.

– விமலன்.

## எவருக்கு எது சொந்தம்



டரன் லீமன்
...ணம் முடியுமா

ரிக்கிபொண்டிங் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அவருக்கு இடம்விட்டு விலகிப் போகப் போகிறவர் யார் என்ற வினா எழுந்துள்ளது. அவுஸ்ரேலிய அணித் தலைவரின் இடத்தை நிரப்பவே 23 வயதான மைக்கல் கிளார்க் உள்வாங்கப்பட்டார். ஆனால் பொண்டிங் உள்வரும் நிலையில் மைக்கல் கிளார்க் வெளியேற்றப் பட முடியாதநிலை உருவாகியுள்ளது. காரணம் பல மூத்த உறுப்பினர்கள் செய்யாத பெருங் கடமையொன்றை மைக்கல் கிளார்க் செய்துள்ளார். அதாவது தனது முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே 151 ஓட் டங்கள் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இதேவேளை 34 வயது நிரம்பிய டரன் லீமன் தன் இடத்தை இழக்கும் ஆபத்தை எதிர் நோக்குகின்றார். முன்னாள் அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர் டக் வோல்டர்ஸ் கருத்துக்கூறும் போது - மைக்கல் கிளார்க் இதற்குச் சிலகாலம் முன்னரே டெஸ்ட் அணிக்குள் வந்திருக்க வேண்டியவர். ஆனால் தெரிவாளர் கண்ணில் இவர் ஏன்படவில்லை என்பது ஆச்சரியம் தான் என்கிறார். மேலும் வயதில் மூத்தவர்களை நீக்கி விட்டு வயது மூத்தவர்களையே அணிக்குள் கொண்டு வருவது பொருத்தமல்ல. டரன் லீமன் பற்றிக் கூறும்போது இவரின் டெஸ்ட் தரம் உன்னதமானதுதான். ஆனால் முதல் டெஸ்டில் இவரது விளையாட்டு எதிர் காலத்தில் இவரது டெஸ்ட் நிலையைக் கேள்விக் குறியாக்கிவிட்டது.

அவுஸ்ரேலிய அணியில் அநேகமானோர் முப்பதுகளையும் அண்மித்தும் தாண்டியும் ஓடிக் கொண்டிருக்கையில் மைக்கல் கிளார்க் 23 வயதில் டக் வோல்டர்சைக் கவர்ந்தது மிகவும் நியாயமானதுதான். கிரிக்கெட் ரகிகர்கள் அவுஸ்ரேலிய அணியைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள். அட டரன் லீம னைக்கூட அணியில் இருந்து நீக்க நினைக்கும அளவுக்கு அவுஸ்ரேலியத் தெரிவுக்குழு எத்தகைய வசதியோடு இருக்கிறது என்பதுதான் அது.



மைக்கல் கிளார்க்
புதிய பூவிது

- சர்மிளா.

# புதிய திசையில் பாருங்கள்



ரசல் ஆர்னல்ட் இலவு காத்த கிளி

இலங்கையில் அதிகம் பேசப்படும் விளையாட்டு கிரிக்கெட். அதிலும் உயிர்காக்கும் மருந்தினைப் போல் இலங்கைக் கிரிக்கெட்டின் நன்மை கருதி, பல வித விமர்சனங்களும் வருவது வழக்கம். இந்த வகையில் புதியதொரு கண்ணோட்டம் ஒன்று, தலைநகர்ப் பத்திரிகையில் வாசகர் கடிதம் ஒன்றாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதன் உள்ளடக்கம் சுவையாக இருந்தது.

முதலாவதாக எழுப்பப்பட்டுள்ள கேள்வி - பாகிஸ்தான் சென்றுள்ள இலங்கை அணியில் ஏன் ரஸல் ஆர்னல்ட் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதாகும். இவர் மீது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி ஏதும் தெரிவுக் குழு வினருக்கு இருக்கின்றதா? இல்லாவிட்டால் நிறைந்த அனுபவமும் உயர்தரமும் வாய்ந்த ரஸல் ஆர்னல்ட் நீக்கப்பட்டு, கண்டாம்பி எப்படி அந்த இடத்தை நிரப்பமுடியும்? என்று குமுறுகிறார் வாசகர்.

சரி ஆர்ணல்ட் வேண்டாம் விடுங்கள். ஏன் முபாரக் இல்லையா. வன் டோர்ட் இல்லையா? ஏன் இவர்கள் எல்லாம் மனசில் பதியாத கழகங்களுக்கு ஆடுவது தான் தெரிவில் புறக்கணிக்கப்படக் காரணமாக இருக்கின்றதோ என்கிறார். மேலும் தொடர்ந்து ஒரு சுவையான தனது அவதானத்தைக் கூறுகிறார் அவர். இலங்கைக் கிரிக்கெட் அணித் தெரிவு இலங்கை எனும் நாட்டின் அணியென்ற தோற்றப்பாட்டை விட, எஸ்.எஸ்.ஸி மற்றும் புளும் பீல்ட் கிரிக்கெட் கழகங்களின் அணி போலல்லவா இருக்கிறது. இதற்கு ஒரு சந்தேக ஆதாரமாக இப்படி ஒரு செய்தியைக் கூறுகின்றார் அவர். அதாவது ஏழு தெரிவாளர்களில் ஐந்து பேர் மேற் கொண்ட கழகங்களைச் சேர்ந்தவர்கள். அதனால் ஒரு பக்கச்சார்பு இருக் குமே என்று ஒரு சந்தேகத்தையும் கிளப்புகிறார்.



முபாரக்
காத்திருந்து காத்திருந்து

இந்தப் போக்கில் போனால் 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடப் போகும் அணி, எஸ்.எஸ்.ஸி புளும் பீல்ட் அணியாக அல்லது ஆனந்த நாலந்த அணியாகத்தான் இருக்கும் என்று சுவாரஸ்யமாக் கூறும் அவர் - ஆர்னல்ட், முபாரக், வன்டோர்ட் போன்றவர்கள் தங்கள் விளையாட்டை இலங்கையைத் தவிர்த்து வேறெங்காவது தான் விளையாடவேண்டி இருக்கும் என்கிறார்கள்.

இது ஒரு வாசகர் கடிதத்தில் காணப்பட்ட கருத்துக்களாக இருந்தாலும், முற்று முழுதாக நியாயமற்ற கருத்துக்கள் கொண்ட கடிதமாக எண்ணமுடியவில்லை. கிரிக்கெட்டில் ஆர்வமுள்ளவர்கள் சிந்தித் துப் பார்க்கவேண்டிய விடயம் தான் இது. இப்படியான விடயங்களை அலாக்காகத் தூக்கி ஓரத்தில் எறிந்துவிடாமல், பல்வேறு நியாயங்களையும் சீர்தூக்கிப் பார்த்தால் - இலங்கை கிரிக்கெட்டுக்கு கூடிய நன்மை கிடைக்கும் அல்லவா. ஏனெனில் இன்றைய இலங்கை ஆஹா ஓஹோ என்று விழிவிரிய வியந்து நிற்கும் அளவில் இல்லை என்பதே யதார்த்தமான நிலையாக இருக்கிறது.

- நிர்மலன்..


## ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. வலுக்குறைந்தோர் பரா ஒலிம்பிக் போட்டிகள் பதக்கப் பட்டியலில் முதன்மை பெற்ற நாடு எது?
02. இந்திய - அவுஸ்ரேலிய டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்ரேலிய தற்காலிக அணித்தலைவர் யார்?
03. சீன மகளிர் ஒற்றையர் ரெனிஸ் கிண்ணத்தை வென்றவர் யார்?

### விளையாட்டுப் புதிர் - 21

விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர்:........................................

முகவரி:........................................

01.

12.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ்விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு 26.10.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

விளையாட்டுப்புதிர் - 20
வெற்றியாளர்
நகுலேஸ்வராசா நெல்சன்,
மண்டான், கரணவாய் மேற்கு.

விலாசம்: விளையாட்டுப்புதிர் - இல.21
நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

அனுசரணை:
ஜொனெக்ஸ் மல்ரி விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# சிறகு விரித்து உயரப் பறந்திடு



தர்சினி
வானமே எல்லை

யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மாணவி குணரட்ணம் தர்சினி தனது பாடசாலையை மட்டுமல்ல. எமது பிரதேச முழுத் தமிழ் மா ணவ மாணவியரையும் பெருமைப்படுத்தி இருக்கிறார்.

பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட தடகளப்போட்டிகளில் குண்டெறிதல் நிகழ்வில் 21 வயதிற் குட்பட்டோர் பிரிவில் அற்புதமானதொரு தங்கப்பதக்கத்தை வென்றெடுத்திருக்கிறார் இவர். இவரது விளையாட்டுத் துறை பற்றிய பல தகவல்களை அண்மைய நாட்களில் அறிந்து கொள்ள எல்லோருமே மிகுந்த ஆர்வமாக இருந்தார்கள். தற்பொழுது நன்றாகவே அறிந்து கொண்டும் இருக்கிறார்கள். தனது குண்டெறிதல் நிகழ்வின் தங்கம் வென்ற சந்தர்ப்பத்தை விளக்கும் அவர் முதலாவது சந்தர்ப்பத் தில் 8.93 மீற்றர் எறிந்து தனது மனத்தைரியத்தாலும் வைராக்கியத்தாலும் 9.66 மீற்றர் எறிந்து சாதனை படைத்ததை நினைவு கூர்கிறார்.

**சாதனைகள்**

| | |
|---|---|
| 2001 - 17 வயதின் கீழ் | மாவட்ட மட்டம் 2ம் இடம் |
| | மாகாணமட்டம் 4ம் இடம் |
| | தேசியமட்ட பங்கேற்பு |
| 2002 - 19 வயதின் கீழ் | மாவட்ட மட்டம் 1ம் இடம் |
| | மாகாணமட்டம் 3ம் இடம் |
| 2003 - 19 வயதின் கீழ் | மாவட்ட மட்டம் 2ம் இடம் |
| | மாகாணமட்டம் 3ம் இடம் |
| | தேசியமட்ட பங்கேற்பு |
| 2004 - 21 வயதின் கீழ் | தேசிய மட்டம் தங்கப்பதக்கம் |

ஒருவரின் வெற்றியின்பின்னால் பலரின் உழைப்பும் இருந்திருக்கும் என்பதைத் தெளிவாகவே எடுத்துக் கூறுகிறார் தர்சினி. ஒரு சாதனையைப் படைப்பது கடினம். அதனைவிடக் கடினம் அந்தச் சாதனையை தக்கவைத்துக்கொள்வதும் அதற்கப்பால் புதிய சாதனைகளை நோக்கிச் செல்வதுமாகும். இந்த விடயத்தில் எமது மண்ணின் மகள் தர்சினிக்கு நிறையவே பக்கபலம் தேவைப் படும். அவர் தனது விருப்பம் பற் றிக் கூறுகையில் சர்வதேச அளவில் சாதனை புரிய வேண்டும். அதற்கு முன்னதாக தேசிய மட்ட சாதனையை முறியடிக்க வேண்டும் என்கிறார்.

விளையாட்டுத் துறையில் ஒவ்வொரு அடியாக முன் னெடுத்துச் சாதனை படைப்பதற்கு பல்வேறு அடிப்படை வசதிகள் தர்சினிக்கு வாய்க்க வேண்டும். இந்த வகையில் நவீன பயிற்சி ஆலோசனைகள் நவீன பயிற்சி நிலையங்களில் பயிற்சியை மேற்கொள்ள என்று திட்டமிட்ட வகையிலேயே இவை மேற் கொள்ளப்படவேண்டும்.

இவற்றைப் பெறுவதில் கணிசமானதொரு பொருளாதாரப் பலம் தர்சினிக்கு தேவைப்படும். எங்கள் மண்ணில் நல்ல மனம் கொண்டோர் நிறையவே உள்ள னர். தர்சினி பாடசாலை மாணவி. எனவே அவரது எல்லையை எட்ட எல்லோரும் துணைபுரிய வேண்டியது அவசியம்.

- ஜோசப் கிருஸ்ணா.

# முள்மேல் ரோஜா



இஸின்பயேவா
இந்த விருது போதுமா

இந்த வருடத்தின் அதிசிறந்த தடகள வீராங்கனை விருதைப் பெற்றுக்கொண்டவர் ரஷ்யாவின் யெலினா இஸின்பயேவா. அதிசிறந்த ஆடவர் தடகள வீரராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பவர் எதியோப்பிய நாட்டின் கெனெனிஸா பிகேலே.

இஸின் பயேவா இவ்வருடத்தில் மட்டும் எட்டு கோலுன்றிப் பாயும் சாதனைகள் நிகழ்த்தியவர். பெல்ஜியத்தின் பிரஸல்ஸ் நகரில் நடைபெற்ற தடகளப்போட்டிகளில் 4.92 மீ உயரம் கடந்து உலக சாதனையைத் தன்னகத்தே கொண்டிருப்பவர். உண்மையில் பயிற்சிகளின் போது 5 மீற்றரைக் கடந்த சந்தர்ப்பங்களும் உண்டு.

இஸின்பயேவா ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்றவர். இதே போல பிகேலே 10000 மீற்றரில் தங்கமும், 5000 மீற்றரில் வெள்ளியும் வென்றவர். கடந்த ஞாயிறன்று 4.83 மீற்றர் உயரம் கடந்து தங்கம் வென்ற இஸின்பயேவா பணம் எனக்கு பெரிதல்ல. ரசிகர்களை மகிழ்ச்சிப் படுத்துவதே எனது விருப்பம் என்கிறார். பிகேலே 5000 மீ மற்றும் 10000 மீ நெடுந்தூரம் ஓட்டப் பந்தயங்களில் உலக சாதனையைக் கொண்டிப்பவர்.

ஒலிம்பிக்போட்டிகள் முடிவடைந்த பின்னர் நான் மிகவும் களைத்துப்போயிருக்கிறேன். நான் சிறிது ஓய்வு பெறுவதையே விரும்புகின்றேன் என்றார் இவர்.

முன்னதாக உலகின் தலைசிறந்த பதினைந்து தடகள வீர வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு அதிலும் ஐந்து பேரை சர்வதேச வலைப்பின்னல் வாக்களிப்பு மூலம் தெரிந்தெடுத்தார்கள். இதன் பின்னர் சர்வதேச தடகள ஆணையம் இறுதி இருவரைத் தெரிவு செய்திருந்தது.

ஆடவர் பிரிவில் 110 மீ ஒலிம்பிக் தடைதாண்டல் தங்கம் வென்ற லியூசியாங், நீளம்பாய்தல் வீரர் கிறிஸ்ரீன் ஒல்கொன், பரிதிவட்டம் வீசும் வீரர் வேர்ஜினி ஜிஸ் அல்கேனா நெடுந்தூரஓட்ட வீரர் ஹிக்கம் எல்குறோஜ் ஆகியோரை மேவி - பிகெலே முதலிடம் பெற்றார்.

இதே வேளை மகளிர் பிரிவில் பிரித்தானியாவின் கெலிஹோம்ஸ் 400 மீற்றர் வீராங்கனை ரொனிக் வில்லியம் டார்லிஸ் குறுந்தூர ஓட்ட வீராங்கனை வெரோனிக்கா கம்பெல் முப்பாய்ச்சல் வீராங்கனை கரோலினா குளுப்ட் ஆகியோரை பின்தள்ளி - இஸின்பயேவா முன்னிலை பெற்றுள்ளார்.

இவ்வளவு உயர்வான நிலைக்கு வருவது என்பது இலகுவான தொன்றல்ல. இதற்காக எத்தனை வருடங்கள் இவர்கள் உழைத்திருப்பார்கள். தமது எத்தனை சந்தோசங்களை இழந்திருப்பார்கள். தம்மைத் தாமே எவ்வளவு வருத்தியிருப்பார்கள். ஆம் எத்தனையோ இன்பங்களை இழந்து உலகின் முதன்மையை அடைந்துள்ளார்கள் இவர்கள். இது ஒன்றும் றோஜாப் பூக்கள் பரப்பிய பஞ்சணை மெத்தையல்ல. விளையாட்டு விளையாட்டாக வாழ்க்கைத் தத்துவத்தை எடுத்துக் கூறுகிறார்கள்.

- ஸ்டலின்.



பிகேலே கறுப்புத்தங்கம்

### காணிப் பிரச்சினைகள், மோசடிகள் குறித்து

# அரசியற்துறை பணிமனையில் வவுனியா மக்கள் முறைப்பாடு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் காணிப் பிரச்சினை சம்பந்தமாகவும், முகவர் மோசடி தொடர்பாகவும் பல முறைப் பாடுகள் வவுனியா அரசியற்துறைப் பணிமனையில் மக்களால் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளதாக, வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப் பாளர் தர்மேந்திரா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

காணிகளுக்குரியவர்கள் பிற மாவட்டங்களில், வெளிநாடுகளில் வாழ்ந்து வருவதால், இவர்களுக் குரிய காணிகளை உரிமை கோரு கின்றனர்.

இந்தக் காணிகளுக்கான போலி ஆவணங்களைத் தயாரித்து, அந்தக் காணிகளை வேறு நபர்களுக்கு விற் பனை செய்கின்றனர்.

இதனால் காணிகளை விலைக்கு வாங்கியவர்கள் - நிலத்தில் விவ சாயம் மேற்கொள்ளும்போது, இதைக் காணி உரிமையாளர்கள் அறிந்து, காணிக்குரிய ஆவணங்களைக் காட்டி உரிமை கோருகின்றனர்.

இதனால் விவசாயச் செய் கையை மேற்கொண்டவர் - குறிப் பிட்ட காணியைவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இந்த நிலையில் காணிகளை விற்பனை செய்தோர் தலைமறைவா கின்றனர்.

இது சம்பந்தமாகக் காணிகளை விலைக்கு வாங்கியோர் - வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும், உரிய நடவடிக்கை எடுக்கப் படாததால், வவுனியா அரசியற் துறைப் பணிமனையில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற் றுத் தருவதாகக்கூறி, பெருந்தொகைப் பணத்தை அறவிட்டு, பின்னர் அவர் களை ஏமாற்றுவதுடன், சிலர் தலை மறைவாகியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மின்னல் தாக்கி ஒருவர் காயம்

கடந்த வியாழக்கிழமை புதுக் குடியிருப்பு பிரதேசத்தில் மின்னல் தாக்கியதில் யுவதி ஒருவர் காய மடைந்தார்.

புதுக்குடியிருப்பு சந்தைப்பகுதி யில் மின்னல் தாக்கியதில் காய மடைந்த யுவதி - புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஜெனித்தா (வயது 21) என்பவரே இந்தச் சம்பவத்தில் காயமடைந் தார்.




# கரிப்பட்ட முறிப்பு பிரதேசத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கரிப்பட்ட முறிப்பு பிரதேசத்தில் புதிதாக அமைக் கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கிராம அலுவலர் சிதம்பரநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழத் தேசியக் கொடியை பிர தேசப்பொறுப்பாளர் திகழ்வண்ணன் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில் ஆரம்ப சுகா தார நிலையத்துக்கான பெயர்ப்பல கையைப் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜெயகுல ராஜா திரைநீக்கம் செய்து வைத் தார்.

நிலைய கட்டடத் தொகுதியை யுனிசெவ் உதவித்திட்டப் பணிப்பா ளர் கிரோஜி, பிரதி மாகாண சுகா தார சேவைகள் பணிமனையைச் சேர்ந்த நாகேஸ், கருநாயல்பற்று விவாகப் பதிவாளர் பஞ்சலிங்கம் ஆகியோர் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து சிறப்புரைகள், கருத் துரைகள் போன்றன இடம்பெற்றன.

### சிரமதானப்பணி

நெடுங்கேணி - நயினாமடு அரசி னர் தமிழ் கலவன் பாடசாலையில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

இந்த நிகழ்வு பாடசாலை முதல் வர் சவுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இந்தச் சிரமதானப் பணியில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிரமதா னப் பணியை சிறப்பாகச் செய்து முடித்தனர்.

# முத்தையன்கட்டு பிரதேசத்தில் சுகாதார நிலையம் திறப்பு

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் - முத்தையன்கட்டு இடதுகரைப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு - கிராம அபிவி ருத்தி சங்கத்தலைவர் பேரின்ப நாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் சுபாஜினி கந்தையா ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக்கொடியை ஒட்டு சுட்டான் அரசியற்துறைப் பொறுப்பா ளர் கதிர் ஏற்றிவைத்தார். ஆரம்ப சுகாதார நிலையத்தின் பெயர்ப் பலகையை முல்லைத்தீவு மாவட்ட தலைமைப்பீட உதவி அரச அதிபர் ஆரணி திரைநீக்கம் செய்து வைததார்.

சுகாதார நிலைய கட்டடத்தை யுனிசெப் உதவித் திட்டப் பணிப்பா ளர் திறந்து வைத்தார். ஏனைய கட்ட டங்களை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜெயகுல ராஜா, முல்லைத்தீவு சுகாதார வைத் திய அதிகாரி பணிமனையை சேர்ந்த நாகேஸ்வரன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

# கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மரம் நாட்டு விழா ஆரம்ப நிகழ்வு

கிளிநொச்சியில் நேற்று முன் தினம் மரம் நாட்டு விழா இடம் பெற்றது. கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் காலை 10 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கரைச்சிப் பிரதேச செயலர் பொன். வித்தியானந்தன் ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றினார்.

மங்கள விளக்கு ஏற்றப்பட்டதை அடுத்து, மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரி. இரா சநாயகம், அரச சார்பற்ற இணையத் தலைவர் கணேசபிள்ளை, மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் உள்ளிட்ட பலர் மரநடுகையை ஆரம்பித்து வைத்தனர்.

# 5 ஆயிரத்து 450 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியாத நிலை

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலப் போர் நடவடிக்கை மூலம், 5450 ஏக்கர் நிலப்பரப்பு - பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளது.

கடந்த காலங்களில் இராணுவத் தால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை மூலம், பரந்தன் பிர தேசத்தில் 1700 ஏக்கரும், கிளி நொச்சிப் பிரதேசத்தில் 350 ஏக்க ரும், பூநகரிப் பிரதேசத்தில் 1150 ஏக்கரும், பளைப் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 250 ஏக்கருமாக - மொத் தம் 5 ஆயிரத்து 450 ஏக்கர் நிலப் பரப்பில் வெடிபொருட்கள், மிதி வெடிகள், மண்அணைகள், இராணு வத்தால் கைவிடப்பட்ட காவலரண் கள் காரணமாக, எந்தவிதமான பயிர்செய்கையையும் மேற்கொள்ள முடியாதநிலை காணப்படுகிறது.

# கட்டடமின்றி இயங்கும் மடுக்கல்வி வலயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மடுக்கல்வி வலயத்துக்கென நிரந்தரக் கட்டட மின்றி மிக நீண்ட காலமாக இயங்கி வருகின்றது.

இதனால் எந்தவொரு பயிற்சிநெறிகளையோ, ஆலோசனைக் கலந்துரை யாடல்களையோ மேற்கொள்ளமுடியாதுள்ளது என - மடு வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்தப் பணிமனைக்குட்பட்ட நிர்வாகம் ,கிளை நிதிக்கிளை அலுவல கம், கணினிப்பிரிவு போன்றன ஒரே கட்டடத்திலே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்ட போது, பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி கோரியபோதும் - எந்த அமைப்பும் இதற்கு நிதியுதவியைச் செய்வதற்கு முன்வரவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# சின்னஞ் சிறு செய்திகள்

### பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதி தாக நியமனம் பெறும் பட்டதாரிக ளுக்கும், வேலையற்ற பட்டதாரிகளுக் குமான அவசரக் கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு புகுமுகமாணவர் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன், வேலையற்ற பட்டதாரி களுக்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

இதில் புதிதாக நியமனம் பெறும பட்டதாரிகளும், வேலையற்ற பட்ட தாரிகளும் தவறாது சமூகமளிக்கு மாறு - அரச வேலையற்ற பட்ட தாரிகள் ஒன்றியம் கேட்டுக்கொண் டுள்ளது.

### கிளிநொச்சி வைத்தியசாலைக்கு உபகரணங்கள் வழங்கல்

கிளிநொச்சி மாவட்டத்தின் பொது வைத்தியசாலைக்கென உலகதரிசன நிறுவனத்தால் 11 லட்சம் ரூபா பெறுமதியான உபகர ணங்கள் நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலை மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இரசாயன பகுப்பாய்வு உபகரணங்கள், அதற்குரிய மருந்துகள், குழந்தை பராமரிப்பு இயந்திரம், இரு குளிர்சாதனப் பெட்டிகள் போன்றன அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த அன்பளிப்பை உலக தரிசன நிறுவன உதவி முகாமை யாளர் நைல்ஸ்சால் மாவட்ட வைத் திய அதிகாரியிடம் கையளித்தார்.

### மரக்கன்று நடுகை

தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தால் 50 ஆயிரம் மரக்கன்றுகளை நடுந்திட்டம் ஆரம் பிக்கப்படவுள்ளது.

கடந்த காலத்தில் நடைபெற்ற போரால் அழிக்கப்பட்ட மரங்க ளுக்கு மாற்றீடாக, இந்த மரநடுகை ஆரம்பிக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு, மன்னார், வவு னியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இந்த மர நடுகை மேற்கொள்ளப்படவுள்ளது.

### புனரமைப்புச் செய்யப்படாத வீதிகள்

முல்லைத்தீவு மாவட்டம் பாண் டியன்குளம் பிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனர மைக்கப்படவுள்ள வீதிகள் இது வரையும் புனரமைக்கப்படாதுள்ளது.

இந்தப் பிரதேசத்திலுள்ள செல்வ புரம், மரப்பாலம் வீதி - உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனர மைப்பதற்கு தெரிவு செய்யப்பட் டுள்ளது.

இதனால் இந்த வீதியூடாகப் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின் றனர்.

### ஆணின் சடலம் கண்டெடுப்பு

இராமநாதபுரம் குளத்தை அண் டிய காட்டுப் பகுதியில், மரத்தில் தொங்கிய நிலையில் ஆணின் சட லம் ஒன்று கடந்த வியாழக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.

காளிகோயிலடி புதுக்காட்டைச் சேர்ந்த கோவிந்தன் (வயது 55) என்பவரின் சடலமே கண்டுபிடிக்கப் பட்டது. இது தொடர்பான மேல திக விசாரணைகளை வட்டக்கச்சி தமிழீழத் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (கௌ.த)

### மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சின்னக் கருக்கல் பிரதேசத்திலுள்ள மீன வக் குடும்பங்களுக்கு மீன்பிடி உப கரணங்கள் வழங்கப்பட்டன.

கடந்தகால போர் நடவடிக்கை யின்போது, இடம் பெயர்ந்து பேசாலை நலன்புரி நிலையத்தில் தங்கியி ருந்த மக்கள், மீண்டும் இப்பிர தேசத்தில் மீளக்குடியமர்ந்து மீன் பிடித் தொழிலை மேற்கொண்டு வரு கின்றனர்.

இதில் 40 குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன் பிடி உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளன.

### தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரிப் பிரதேசத் தில் வன்னி தொழில்நுட்ப நிறுவன மும், மாணவர் அமைப்பும் இணைநது நடத்தும் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு நாளை நடைபெறவுள் ளது.

இது முழங்காவில் மகா வித்தி யாலயம், கேரதீவு இந்து மகா வித் தியாலயம், பூநகரி மகா வித்தியா லயம், பூநகரி நல்லூர் மகா வித்தி யாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திலும், பளை மத்திய மகா வித்தியாலயத்திலும் கணினிக் கற்கைநெறி சம்பந்தமான கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

கிளிநொச்சி பிரதேசத்தில் மக் கள் கூடும் இடங்களிலும், சந்தை களிலும் கட்டாக்காலிக் கால் நடை கள் கூட்டம், கூட்டமாக அலைந்து திரிந்து பல அழிவுகளை ஏற்படுத் துவதுடன், வீதி விபத்துக்கும் காரணமாக அமைகின்றன.

இதனால் கட்டாக்காலிக் கால் நடைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தமிழீழ பொருண்மிய மேம்பர்ட்டு நிறுவனத்தினர் ஈடு பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையில் பிடிக்கப்பட்ட கால்நடைகளின் உரிமையா ளர்கள் தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அவற்றினை மீளப்பெறு மாறும், தொடர்ந்து இந்தக் கால் நடைகளைக் கட்டாக்காலிக ளாக அலையவிடாது கட்டுப்படுத்தி வளர்க்குமாறும் தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விலங்கு வேளாண்மைப் பகுதியினர் அந்தப் பிரதேச மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.



புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கைவேலிப் பாலம் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வதைப் படத்தில் காணலாம்.

படம்: தவபாலன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடுஇன்றி நீர்நிறைந்து அற்று.

திருக்குறள்

# நமது நோக்கு

## சங்கரியாருக்கு ஒரு விண்ணப்பம்

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்களால் - முற்றிலும் நிராகரிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்ட நிலையில், கிட்டத்தட்ட தலைமறைவான நிலையில் இந்தியா- கனடா - கொழும்பு என்று ஓரிடமென்றில்லாமல் பல்வேறு நாடுகளுக்கும் ஓடித்திரிந்து விலாசமற்றவராகிப்போன ஆனந்த சங்கரியார் - அண்மையில் கனடாவில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வோடு மீண்டும் தன்னை, அதாவது தனது இருப்பை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

பொங்குதமிழ் என்பது புலிகளுக்கு ஆதரவான நிகழ்வென்றும், அதனைக் கனடிய அரசு தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து - தனது தமிழின விரோதப் போக்கை மீண்டும் பகிரங்கப் படுத்தி உறுதிசெய்தபோதே சங்கரியாரின் பொட்டுக்கேடெல்லாம் முழுமையாகச் சந்திக்கு வந்துவிட்டதென்றே கூறவேண்டும்.

இந்தத் துரோகத்தனமான கோரிக்கையை முன்வைத்ததன் மூலம் சங்கரியார் மீது - ஆங்காங்கே அவரை ஒரு சில ஆதரவாளர்கள் அனுதாபத்தின் பேரில் வைத்திருந்த மதிப்பைக்கூட முற்றாக இழந் துள்ளார் என்றே கூறவேண்டும்.

ஹெல உறுமய - ஜே.வி.பி போன்ற இனவாத அமைப்புகளும் இதேபோன்ற கோரிக்கையையே கனடிய அரசிடம் முன்வைத்தன என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும். எனவே, ஹெல உறுமய, ஜே.வி.பி போன்ற, தமிழர்களுக்கு எதிரான சமாதான முயற்சிகளை நிராகரிக்கும் சக்திகளின் கொள்கைப் போக்கிற்கு அனுசரணையாகவே சங்கரியார் செயற்படத் தொடங் கியுள்ளார் என்றே உறுதியாக நம்பவேண்டியுமுள்ளது.

தனது ஆரம்ப அரசியல் நுழைவுக் காலத்திலிருந்து இன்று வரைக்கும் சங்கரியார் அடித்த அரசியற் குத்துக்கரணங்கள் ஏராளம். அவை ஒவ்வொன்றும் அவரது மிகவும் பலவீனமான கொள்கைப் பற்றுதலை ஆதாரப்படுத்தும் தன்மை கொண்டவை களாகும்.

கனடாவை, பொங்குதமிழ் நிகழ்வை நிறுத்தத் தூண்டும் முயற்சியில் - வரலாற்றுத் தோல்வியைக் கண்ட சங்கரியார் இப் போது விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டதும், இன்றைய சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கு மிக அவசியமானதென எதிர்க்கட்சியுட்பட பலதரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருவதுமான - இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக தனது கருத்துக்களை பொருத்தமற்றதும், நெருக்கடி மிக்கதுமான ஒரு சூழலில் வெளியிட்டு குழப்பத்தை ஏற்படுத்த முயன்றுள்ளார். இது சங்கரியாரின் அடுத்த குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக்காம்புப் பணியாகும்.

கிட்டத்தட்ட அரைநூற்றாண்டுகால அரசியலில் இருந்துவரும் மூத்த அரசியல்வாதியான தன்னைத்தானே தம்பட்டமடிக்கும் சங்கரியார் - தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எழுதிய கடிதமொன்றில் தனது புகழையும் கீர்த்தியையும் தானே புலம்பிக் கொண்டு, சரி- பிழையை எடுத்துக் கூறும் பொறுப்பு தனக்கு உண்டு என, அதற்கான உரிமையை எடுத்துக் கொண்டு விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என பொறுப்பற்ற முறையில் ஒரு கைக் கூலியின் தரத்தில் நின்று குறிப் பிட்டுள்ளார்.

முதலில் தேசியத் தலைவரை தம்பி என விழித்து கடிதம் எழுத அவருக்கு கடந்த தேர்தலின் பின்னர் எந்தத்தகுதியும் இல்லாது போய்விட்டது என்பதை அவர் உணர்ந்திருக்க வேண்டும்.

அது கிடக்கட்டும் தனித்தமிழ் நாடு - தமிழீழம் பெற சாத்வீகப் போராட்டத்தை நடத்தும் தமிழர் விடுதலை கூட்டணியில் ஒருகாலத்தில் அதற்கு ஆதரவாக, ஆரம்பப்பட்டமாக அரசியல் நடத்திய சங்கரி யாருக்கு இப்போது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை நியாயமற்றது -என்று கூறுமளவிற்கு அரசியல் அஞ்ஞானம் ஏற் பட்டது அறணைத்தனத்தின் வெளிப்பாடா? அல்லது ஆள்வோருக்கும், வல்லாதிக்க சக்திகளுக்கும் அடங்கிப் போய் நின்று செயற்படும் அடிமைத்தனத்தின் வெளிப்பாடா?

சிலவேளை இரண்டுமாக இருக்கலாம்.

இடைக்கால நிர்வாகத்தை மக்கள் ஏற்பார்களா? என்று கேட்கும் சங்கரியார்... இதற்கு உடன்படும் அரசு பதவியில் நிலைக்க முடியுமா? என்றும் வினாவெழுப்புகிறார். என்னே அரசியல்சாணக்கியம்!

'இந்தத் தீர்வுத்திட்டம் அரசு பரிசீலிக்கக் கூடிய ஒன்றல்ல' என்று கூறும் சங்கரியார் - அதிலுள்ள சில பிரேரணைகள் வடக்கிலும் - கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களாலேயே ஏற்றுக் கொள்ளமுடியாதவை என்றும் தெரிவித்துள்ளதுடன் விரைவாக அமைதியைக் கொண்டுவர தனது ஆலோசனைகளை பரிசீலிக் குமாறும் கோரியுள்ளமை தான் அவரது கோமாளித்தனத்தின் உச்சக்கட்டமாகும்.

கடந்த காலங்களில் தமிழ்மக்கள் எத்தனையோ துன்ப துயரங்களை எதிர்கொண்டு, போராட்ட அழுத்தங்களைத் தாங்கி விடுதலைக்காக இரத்தம் சிந்திய வேளைகளில் - கொழும்பிலும் இந்தியாவிலும் மாறிமாறி நின்றுகொண்டு சங்கரியார் செய்த திருகுதாள அரசியல் தமிழ்மக்களுக்கு நன்கு தெரிந்தமை யால்தான் அவரைக் கடந்த தேர்தலில் தூக்கியெறிந்து அரசியலில் முகவரியற்றவராக்கினார்கள் என்பதை சங்கரியார் புரிந்து கொண்டு இனிமேலும் இப்படி அபத்தமான அரசியலைப் பேசா திருப்பதே தமிழர்களுக்கு நன்மை பயக்கும்.

தமிழர்கள் - தற்போதைய தங்களின் தலைமை தங்களை தலை நிமிர்ந்து வாழவைத்துள்ளது என்பதையும் - தமது எதிர்காலத்தை அது பாதுகாக்கும் என்பதையும் உறுதியாக நம்பு கிறார்கள் என்பதை சங்கரியார் புரிந்து கொண்டு, இப்படியான அர்த்தமற்ற அரசியல் வேலைகளை நிறுத்துவதே உத்தமமாகும்.

அதுவே தமிழர் நலன்களுக்கு உகந்ததுமாகும்.

## நாடும் நடப்பும்




# பதவி உயர்வு அநீதிகளை நீக்க உயர் நீதிமன்றம் கால அவகாசம்

பொலிஸ் திணைக்களத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் பதவியுயர்வுகளின்போதான அநீதிகளைக் களைய உயர் நீதிமன்றம், பொலிஸ் ஆணைக் குழுவுக்கு மேலும் கால அவகாசத்தை வழங்கியுள்ளது.

பதவி உயர்வுகளின்போது, பாதிக்கப்பட்ட பொலிஸார் சிலர் இது தொடர்பாக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுமீதான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம், எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பிரதிவாதி தரப்பான பொலிஸ் ஆணைக்குழுவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, மனு தாரர்கள் பலருக்குப் பொலிஸ் ஆணைக்குழுப் பதவி உயர்வு களை வழங்க நடவடிக்கைகள் எடுத்துவருவதாகத் தெரி வித்தனர்.

இதனைக் கருத்திற்கொண்டு, உயர் நீதிமன்றம் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் எதிர்வரும் நவம்பர் மாதம் வரையில் கால அவகாசத்தை வழங்கியுள்ளது.

## சட்டவிரோத மதுபானசாலைகள் நல்லூர்ப் பகுதியில் அதிகரிப்பு!

நல்லூர் பிரதேசத்தில் சட்ட விரோதமான முறையில் இருபத்தெட்டுக்கும் மேற்பட்டதுமான மதுபான நிலையங் கள் இயங்குவது கண்டறியப்பட்டுள்ளதாக, நல்லூர் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக்காலமாக எந்தவித மதுபான நிலையங் களுக்கும் அனுமதி வழங்கவில்லை எனவும், திருநெல் வேலிப் பகுதியில் நான்கு மதுபான நிலையங்களுக் கும், கல்வியங்காட்டில் ஒரு மதுபான நிலையத்துக்கும், நல்லூர் செட்டித்தெருவில் ஒரு மதுபான நிலையத்துக்கு மாக இதுவரை ஆறு மதுபான நிலையங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக நல்லூர் பிரதேச செயலர் சு.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

இந்தச் சட்டவிரோதமாக இயங்குகின்ற தமது எல் லைக்குட்பட்ட மதுபான நிலையங்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## கலாசாலை வீதியால் செல்ல யுவதிகள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கலாசாலை வீதியால் செல்லும் யுவதிகள் மீது, இளைஞர் குழுவொன்று சேஷ்டை புரிந்து வருவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த வீதியால் செல்லும் பாடசாலை மாணவிகள் அஞ்சும் அளவுக்கு இவர்களது தொல்லை தாங்கமுடியா துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

திருநெல்வேலி கலாசாலை வீதியில் இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிள்களில் நின்று, இந்த இளைஞர் குழு அட்டகாசம் புரிந்து வருகின்றது.

பலமுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டும் இவர்களது தொல்லை தாங்க முடியாதுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## யாழ்.வலய சைவநெறிப் போட்டி

யாழ்.கல்வி வலயத்தினால், நடத்தப்படும் வலயமட்ட சைவ நெறிப்போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 9 மணி முதல் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இந்த சைவநெறிப் போட்டியில், யாழ்.வலயத்துக்கு உட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டங்களுக்கிடையில் நடத்தப்பட்ட சைவநெறிப் போட்டிகளில் முதல் இரு இடங்களையும் பெற்ற மாணவர்கள் இப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வலய மட்ட சைவநெறிப் போட்டியில் பேச்சுப் போட்டி, சகலகலாவல்லி மாலை ஓதுதல் போட்டி, மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. (58)

## ஓய்வூதியக் கோவைகள் பிரதேச செயலகங்களுக்கு

யாழ்.செயலக ஓய்வூதியக் களஞ்சிய அறையிலிருந்த, எஞ்சிய ஓய்வூதியக் கோவைகள், அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்குப் பகிர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

விதவைகள், அநாதைகள் ஓய்வூதியம் பெறுபவர்களது இணைக்கோவைகளே இவ்வாறு பிரதேச செய லகங்களுக்குப் பாரப்படுத்தப்படுகின்றன.

பிரதேச செயலகங்களுக்குப் பணிகள் பன்முகப்படுத் தப்பட்டபோது, 1997 ஆம் ஆண்டிலிருந்து ஓய்வூதியப் பணிகள் வழங்கப்பட்டமையும், தற்சமயம் ஓய்வூதியக் கடமைகள் யாவும் பிரதேச செயலகங்களாலேயே மேற் கொள்ளப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எஞ்சியிருந்த இந்தக் கோவைகளைத் தரம்பிரிப்பதில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக மாவட்டச் செயலக ஓய்வூதியப் பகுதியினர் ஈடுபட்டிருந்தனர். (24)

## தென்மராட்சி பிரதேச செயலக உப அலுவலகம் நாளை முதல் கொடிகாமத்தில் இயங்கும்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் உப அலு வலகம் நாளைமுதல் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில், தபால் நிலையத்துக்கு அண்மையிலுள்ள தனியார் கட்டடமொன்றில் இயங்கவுள்ளது.

அங்கு கடமையாற்றும் அலுவலர்களது பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி தேவந்தினி பாபு உதவிப் பிரதேச செயலராகவும், கே.தபேந்திரன் ஆளணி உதவியாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எஸ்.பாலச்சந்திரன், வி.சொக்கநாதன், மு.அமிர்தகுமாரி, வி.கெங்கநாதன், ஜே.பமிலஸ் ஆகியோர் நிரந்தரமாகவும், தா.ஐங்கரன், ஐ.ஜெயபூரணி, கே.எஸ். ஐயாத்துரை ஆகியோர் வாரத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய இருநாட்கள் மட்டும் கடமையாற்றுவதற்கு, பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (24)

# கணினி இயக்குநர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கமத்தொழில், கால்நடை, காணி நீர்ப்பாசன அமைச் சின் காணி ஆணையாளர் திணைக்களத்தால் கணனி இயக்குநர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

க.பொ.த சாதாரணதரத்தில் ஒரே தடவையில் ஐந்து பாடங்களில் திறமைச் சித்திபெற்றுள்ள பதினெட்டு வயதுக்கும், நாற்பது வயதுக்கும் இடைப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆறு மாதங்களுக்கும் குறையாத கணினிப் பாடநெறியைப் பூரணப்படுத்தியவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பதாரிகளிடமிருந்து தொழிற் பயிற்சிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றினூடாக தெரிவுகள் நடைபெறும்.

விண்ணப்பங்கள் யாவும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு 7 இல் உள்ள காணி ஆணையாளர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களையும், மாதிரி விண்ணப் படிவத்தையும் இந்த மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிட முடியும் (31)

# வன்னி நிலப்பரப்பில் உந்துருளி வாணிபத்தில் முன்னணி வகிக்கும் சிவகுரு கட்டடப் பொருள், உந்துருளி வாணிபத்தார்

## நவீன UMAZAKI காட்சி அறை ஒன்றினை 18.10.2004 திங்கட்கிழமை கோலாகலமாக திறந்து வைக்கவுள்ளனர்




## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



திறப்பு விழாவை முன்னிட்டு 31.10.2004 வரை
விசேட வசதியாக வரி உட்பட

- கொழும்பு விலையிலே விற்பனை செய்யப்படும்.
- 2 தலைக்கவசம் , 2 மழைக்கவசம் , மூன்று கணனி முறையிலான இலவச பராமரிப்பு
- பதிவுச் சான்றிதழ்கள் 1 வாரத்தில் பெற்றுக் கொடுக்கப்படும்.



இலகுவான முறையில் தவணைக் கட்டணத்தில் உமாசாக்கி மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யும் பொருட்டு St. Anthony's Consolidated Ltd நிறுவனத்தால் வங்கிக் கடன் ஒழுங்குகள் செய்து தரப்படும்

உமாசாக்கி மோட்டார் சைக்கிள்களுக்கான வடபகுதி ஏகவிநியோஸ்தர்

## சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம்

A-9 சாலை, பரந்தன்.

Surabi graphics

### தசரா திருவிழாவை முன்னிட்டு

# நேபாள மாவோயிஸ்ட் போர்நிறுத்த அறிவிப்பு!

நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்கள் அரசு அலுவலகங்களையும், அரசு ஊழியர்களையும் தாக்கி வருகின்றனர். இதனால் இவர்களுக்கெதிராக அந்நாட்டு இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் தலைவர் புஷ்பகமல் தஹால் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் -

நேபாள மக்கள் தசரா திருவிழாவை கொண்டாடுவதற்கு அனுமதியளிக்கும் வகையில் வருகிற 20 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் தற்காலிகமாக நிறுத்திவைக்க மாவோயிஸ்ட் கட்சி முடிவு செய்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

# தாய்வானில் நிலநடுக்கம்!



(தாய்பேய்)

தாய்வானில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 7.6 அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது பதிவாகியிருந்தது. கிட்டத்தட்ட ஒரு நிமிட நேரம் நிலநடுக்கத்தின் பாதிப்பு நீடித்தது.

இதனால் கட்டடங்களில் அதிர்வு ஏற்பட்டது. நிலநடுக்கத்தின்போது தாய்பி நகரில் சென்றுகொண்டிருந்த ரயில் தடம் புரண்டது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

தாய்பி நகரில் பொதுமக்கள் செல்வதற்காக சுரங்கப்பாதை அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பாதையின் ஷட்டர் கதவுகள் நிலநடுக்கத்தால் தானாகவே மூடப்பட்டுவிட்டன. இந்த வழியாகச் சென்ற பொதுமக்கள் ஒரு மணிநேரம் வெளியே வரமுடியாமல் தவித்தனர்.

நிலநடுக்கத்தால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா? இல்லையா? என்பது தெரியவில்லை.

### அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

# வெளிநாட்டுப் பத்திரிகைகளின் கணிப்பில் ஜோன் ஹெரிக்கே ஆதரவு பெருகியுள்ளது!


(வோஷிங்ரன்)

அமெரிக்க அதிபர் தேர்தல் தொடர்பாக 10 நாடுகளைச் சேர்ந்த பத்திரிகைகள் நடத்திய கருத்துக் கணிப்பில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரியே முதலிடம் பெற்றுள்ளார். அத்துடன் எட்டு நாடுகளில் ஹெரிக்கே ஆதரவும் கிடைத்துள்ளது.

அமெரிக்க அதிபர் தேர்தல் அடுத்த மாதம் 2 ஆம் திகதி நடைபெறுகிறது. குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய அதிபர் புஷ்ஷும் ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோன் கெரியும் போட்டியிடுகின்றனர் இருவரும் முழுவீச்சில் பிரசாரத்தில் இறங்கியுள்ளனர்.

வெற்றி தோல்வி குறித்து ஏராளமான கருத்துக் கணிப்புக்கள் வந்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையில் அவுஸ்ரேலியா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜப்பான் மெக்சிக்கோ, ஸ்பெயின், தென் கொரியா, இஸ்ரேல், ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பத்திரிகைகள் அமெரிக்க அதிபர் தேர்தல் தொடர்பாக கருத்துக்கணிப்பு நடத்தின. பிரிட்டனைச் சேர்ந்த 'கார்டியன்' பத்திரிகை இந்தக் கருத்துக் கணிப்பை ஒருங்கிணைத்தது.

இந்தக் கருத்துக்கணிப்பில் இஸ்ரேல் மற்றும ரஷ்ய மக்கள் மட்டுமே அதிபர் புஷ்க்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். மற்றைய எட்டு நாட்டு மக்களும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹெரிக்கே ஆதரவு அளித்துள்ளனர். அவருக்கு 58 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன.

பிரான்ஸ் பத்திரிகை நடத்திய கணிப்பில் 72 சதவீத ஆதரவு ஹெரிக்கே கிடைத்துள்ளது. புஷ்ஷுக்கு வெறும் 16 சதவீதம் கிடைத்தது.

அதுபோல பிரிட்டனில் 52 சதவீதம் பேர் ஹெரிக்கு ஆதரவளித்துள்ளனர். மெக்சிக்கோவில் ஹெரிக்கு 55 சதவீதமும் புஷ்ஷுக்கு 22 சதவீதமும் கிடைத்துள்ளன. ஸ்பெயினில் ஹெரிக்கு 58 சதவீதமும், புஷ்ஷுக்கு 13 சதவீதமும் ஆதரவு கிடைத்துள்ளது. அவுஸ்ரேலியாவில் ஹெரிக்கு 54 சதவீதமும், புஷ்ஷுக்கு 28 சதவீதமும் கிடைத்துள்ளது.

### ஈராக்கில் தமக்கு வழங்கப்பட்ட

# கட்டளைகளை ஏற்றுக்கொள்ள அமெரிக்க ராணுவக்குழு மறுப்பு!

(பாக்தாத்)

ஈராக்கில் பணியாற்றும் அமெரிக்கப் படையினரில் ஒரு பிரிவினர் தமக்கு வழங்கப்பட்ட கட்டளைகளை நிறைவேற்றத் தவறினார்கள் என வெளிவந்த குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணை நடத்தவுள்ளதாக அமெரிக்க இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த 19 பேர் அடங்கிய அமெரிக்கக் குழுவினர் அமெரிக்கப் படையினருக்கான உணவு, நீர் மற்றும் எரிபொருள் விநியோகங்களைச் செய்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக குறித்த படையினர் சிலர், தமது குடும்பங்களுக்கு தொலைபேசி வாயிலாகத் தெரியப்படுத்தியதாகவும் இதனால் அந்தக் குடும்பங்கள் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது வாகனங்கள் எவையும் நல்ல நிலையில் இல்லை எனவும் தமக்கு போதியளவு ஆயுதப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை எனவும் இதனாலேயே தமக்கு வழங்கப்பட்ட கட்டளைகளை தாம் நிறைவேற்றவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்டளைகளை ஏற்க மறுத்த படையினர் கைதுசெய்யப்படவோ, தடுத்துவைக்கப்படவோ இல்லை எனவும் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாக்தாத்திலுள்ள அமெரிக்க கூட்டுப் படைகளின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக்கின் வன்செயல் நிறைந்த பகுதிகளில் அமெரிக்கப் படையினருடன் இணைந்து பணியாற்றுவதற்கு பிரிட்டன் படையினரும் அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்று வருவதாகவும் இன்னமும் இறுதி முடிவெதுவும் எடுக்கப்படவில்லை எனவும் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்தது.

## ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கு ஐந்து நாடுகள் தெரிவாகின!

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்கக்கோரி இந்தியா, ஜப்பான், ஜேர்மன், பிரேசில் ஆகிய நாடுகள் வற்புறுத்தி வருகின்றன. இந்த நிலையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கடந்த 2 ஆண்டுகளாக உறுப்பினர்களாக இருந்த பாகிஸ்தான், அங்கோலா, சிலி, ஜேர்மன், ஸ்பெயின் ஆகிய நாடுகளின் பதவிக் காலம் வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இதைத் தொடர்ந்து நிரந்தர உறுபபினர் அல்லாத இந்த இடங்களுக்கு ஜப்பான், ஆர்ஜன்ரீனா டென்மார்க், கிரீஸ், தான்சானியா ஆகிய நாடுகள் நேற்றுமுன்தினம் ஐ.நா. பொதுச்சபையால் தேர்வு செய்யப்பட்டன.

இந்த நாடுகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 2 ஆண்டுகள் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உறுப்பினர்களாக இருக்கும்.

### ஆப்கானில் கடந்த இரு நாட்களாக இடம்பெற்ற

# இருவேறு தாக்குதல் சம்பவங்களில் அமெரிக்கப் படையினர் உட்பட 6 பேர் பலி!

ஆப்கானில் கடந்த வியாழனும், வெள்ளியும் இடம்பெற்ற வெவ்வேறு தாக்குதல்களில் இரண்டு அமெரிக்கப் படையினர், ஒரு ஆப்கான் பொலிஸ உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் அமெரிக்க இராணுவ விநியோகத் தொடரணி மீது தலிபான் போராளிகளால் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றுமுன்தினம் அமெரிக்க இராணுவ வாகனம் மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் இரண்டு படையினர் கொல்லப்பட்டதுடன் மூவர் காயமடைந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தாக்குதல் ஆப்கானின் குனார் மாகாணத்திலுள்ள அஸ்மார் மாவட்டத்தில் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலில் அந்த மாவட்டத்தின் பொலிஸ் அதிகாரியும், காயமடைந்ததாக மாகாண ஆளுநர் சயீட் பசீல் அக்பர் அக்கா ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

அமெரிக்க இராணுவத் தொடரணி கடந்த வியாழக்கிழமை தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக இவர் சென்ற சமயமே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

ஆப்கானில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று வாக்கெண்ணும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே இந்தத் தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

ஆப்கான் தேர்தலை தலிபான் குழப்பப்போவதாக எச்சரித்தபோதிலும் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் கடந்த சனிக்கிழமை அங்கு தேர்தல் நடைபெற்று முடிந்தது.

இதனையடுத்து அங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் வாக்கெண்ணும் பணிகள் மிகவும் அமைதியாக இடம்பெற்று வருகின்றன.




# ஆப்கான் தேர்தல்; ஹர்சாய் முன்னிலையில்!



ஆப்கானில் தலிபான்கள் ஆட்சி முடிவுக்கு வந்தபின்னர் இடைக்கால ஜனாதிபதியாக ஹமீத் கர்சாய் நியமிக்கப்பட்டார். தற்போது அங்கு ஓரளவு அமைதியான சூழ்நிலை நிலவுவதால் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டது.

இந்தத் தேர்தலில் ஜனாதிபதி கர்சாய் உட்பட 18 பேர் போட்டியிட்டனர். அங்கு தற்போது வாக்கு எண்ணும் பணி நடைபெற்று வருகிறது.

இதில் முதற்கட்ட தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதி ஹர்சாய் 56 சதவீத வாக்குகள் பெற்று முன்னணியில் இருந்தார். முன்னாள் கல்வி அமைச்சர் யூனுஸ் குனோனி 17 சதவீத வாக்குகள் பெற்று 2 ஆவது இடத்தை பிடித்தார். வடக்கு ஆப்கானில் 5 மாகாணங்களில் ஆட்சி நடத்தும் அப்துல் ரசித் தோஸ்தம் 15 சதவீத வாக்குகள் பெற்று 3 ஆவது இடத்தைப் பிடித்தார்.

இந்த வாக்கு எண்ணிக்கையின் முழுமையான முடிவு இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத தொடக்கத்தில் வெளிவரும் என்று தெரிகிறது. அப்போது கர்சாய் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியாகப் பதவி ஏற்பார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

### மராட்டிய சட்டசபைத் தேர்தல்:

# சுயேட்சைகளின் உதவியுடன் காங்கிரஸ் ஆட்சி அமைக்கிறது!

மராட்டிய மாநில சட்டசபை தேர்தல் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்றது.

மொத்தமுள்ள 288 தொகுதிகளில் 2678 வேட்பாளர்கள் களத்தில் நின்றனர். ஆட்சியைக் கைப்பற்ற காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க கூட்டணி இடையே கடும் போட்டி நிலவியது.

288 தொகுதிகளிலும் மின்னணு இயந்திரங்கள் மூலம் வாக்குப்பதிவு நடந்தது. நேற்றுக்காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை நடந்தது. மராட்டியத்தில் எந்தக் கூட்டணிக்கும் பெரும்பான்மை கிடைக்காது என்று கருத்துக்கணிப்புகள் வெளியாகி இருந்ததால் முடிவுகளைத் தெரிந்து கொள்ள நாடெங்கும் பரபரப்பான எதிர்பார்ப்பு நிலவியது.

முன்னணி நிலவரங்கள் வெளியான போது காங்கிரஸ் கூட்டணியும், பா.ஜ.கவும் மாறிமாறி முன்னிலை பெற்றன. இதனால் எந்தக் கூட்டணிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்காது தொங்கு சட்டசபைதான் ஏற்படும் என்று கருதப்பட்டது.

காலை 10 மணி நிலவரப்படி அதிருப்தி வேட்பாளர்களும் சுயேட்சைகளும் 40 தொகுதிகளில் முன்னணியில் இருந்தனர். எனவே யார் ஆட்சி அமைப்பார்கள் என்பதை இவர்களால்தான் நிர்ணயிக்க முடியும் என்ற நிலை நிலவியது. இதன் காரணமாக ஆட்சி அமைப்பதில் இழுபறி ஏற்படும் என்று கூறப்பட்டது.

ஆனால் 11.30 மணிக்குப் பிறகு முன்னணி நிலவரத்தில் மாற்றம் ஏற்பட்டது.

காங்கிரஸ் - தேசியவாத காங்கிரஸ் கூட்டணி கூடுதல் இடங்களைப்பெறத் தொடங்கியது. மதியம் 12.30 மணிக்கு காங்கிரஸ் கூட்டணி 140 இடங்களிலும் பாரதீய ஜனதா கூட்டணி 122 இடங்களிலும் மற்றவர்கள் 26 இடங்களிலும் முன்னணியில் இருந்தனர்.

மராட்டியத்தில் தனித்து ஆட்சி அமைக்க 145 இடங்கள் தேவை. ஆனால் இந்த எண்ணிக்கையை எந்தக் கூட்டணியாலும் எட்டிப்பிடிக்க இயலவில்லை. இதனால் தனித்து ஆட்சி அமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை கிடைக்குமா என்பதில் இழுபறி ஏற்பட்டது.

288 இடங்களில் முடிவு அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் கூட்டணி 139 இடங்களிலும் பாரதீய ஜனதா கூட்டணி 119 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. காங்கிரஸ் கூட்டணியில் தேசியவாத காங்கிரசுக்கு 71 இடங்களும், காங்கிரசுக்கு 67 இடங்களும் கிடைத்துள்ளன.

பா.ஜ.க கூட்டணியில் சிவசேனா கட்சிக்கு 62 இடங்களும், பா.ஜ.விற்கு 56 இடங்களும் கிடைத்துள்ளன.

கருத்துக்கணிப்பில் சொல்லப்பட்டதுபோல் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியமைக்க கூடுதலாக 6 இடங்கள் தேவைப்படுகிறது. எனவே சுயேட்சைகள் ஆதரவுடன் ஆட்சியமைக்கும் முயற்சியில் காங்கிரஸ் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இந்திய - இலங்கை இடையே நேரடித் தொலைபேசி வசதி!

## சென்னையில் ஆரம்பித்து வைப்பு!

(சென்னை)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நேரடித் தொலைத் தொடர்பு வசதியை இந்திய மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் நேற்று சென்னையில் ஆரம்பித்துவைத்தார்.

இதுவரை சென்னையில் இருந்து கொழும்புடன் தொடர்பு கொள்ள சிங்கப்பூர் போன்ற அண்டைய நாடுகளில் இணைப்புக்களே பயன்படுத்தப்பட்டு வந்தது.

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையில் நுண்ணலை விஸ்தரிப்பில் ஒன்றினை மத்திய தொலைத் தொடர்பு அமைச்சர் மாறன் ஆரம்பித்து வைத்ததையடுத்து இந்த நேரடித் தொலைபேசி வசதி செய்யப்பட்டது.

இதன்மூலம் இந்திய - இலங்கை தொலைத்தொடர்பு கட்டணங்கள் கணிசமான அளவு குறைவடையும் என்று கூறப்பட்டது.

தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக மக்களுக்கு விளக்க

# தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் திருகோணமலைக்கு விஜயம்!

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம் செய்து தற்போதுள்ள அரசியல் நிலைமை குறித்து மக்களுக்கு விளக்கியுள்ளனர்.

பொதுமக்களுடனான இந்தச் சந்திப்பு திருகோணமலை நகரில் அமைந்துள்ள சில்வெஸ்டர் ஹோட்டலிலும் மற்றும் நகரசபை மண்டபத்திலும் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள தடைகள், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விடுதலைப் புலிகளும் இணைந்து முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக எடுத்துவரும் நடவடிக்கைகள், திருகோணமலை மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்தனர்.

நேற்றுக்காலை சில்வெஸ்டர் ஹோட்டலில் முஸ்லிம் மக்களையும் பிரமுகர்களையும் தனித்தனியாகச் சந்தித்த இவர்கள் மாலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்டனர்.

இதேவேளை இன்று நான்கு குழுக்களாக பிரிந்து புல்மோட்டை, திரியாய், குச்சவெளி, நிலாவெளி, சல்லி, சாம்பல்தீவு, ஆத்திமோட்டை, ஆலங்கேணி, ஆகிய இடங்களுக்கும் செல்லவுள்ளனர்.

நாளை தம்பலகாமம், கந்தளாய், மூதூர் கிழக்கு ஆகிய இடங்களுக்கு ஒரு குழுவாகவும், ஈச்சிலம்பற்றுக்கு இன்னொரு குழுவாகவும் செல்லவுள்ளனர்.

நாளைமறுதினம் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். (10,04)

# 'அலைபாடும் பரணி' ஒலிநாடா அறிமுக விழா

அலைபாடும் பரணி ஒலிநாடாவின் அறிமுகவிழா இன்று மாலை 3மணிக்கு நெல்லியடியில் அமைந்துள்ள நெல்லை முருகன் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எம்.ரி.சொய்சி, எம்.ரிசொய் ஆகிய இரு கப்பல்கள் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த 24 கடலோடிகளின் நினைவாக இந்த இசைத்தட்டு வெளியிடப்படவுள்ளது.

தர்மேந்திரா கலையகத்தினால் உருவாக்கப்பட்ட இந்த இசைத்தட்டுக்கு இசைப்பிரியன் இசையமைத்துள்ளார்.

## இருதரப்பு....

[illegible]மிடையில் இருந்து வருகின்ற சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேலும் நவீனப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளார். இதன்மூலம் இந்த உடன்படிக்கை இந்தப் பிராந்தியத்திலேயே முன்னோடியாக அமையுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளின் காவலில் இருந்த...

படுவர் என விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து கடந்த வியாழனன்று மட்டக்களப்பில் 10 விடுதலைப் புலிகளும் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டனர். இதனை அடுத்து நேற்று சம்பூரில் உள்ள தமிழீழ நீதிமன்றம் இருவரையும் தலா ஒரு லட்சம் ரூபா காசுப் பிணையிலும, இருவரின் சரீரப் பிணையுடனும் விடுவித்தது.

இவர்கள் இருவரையும் பணம் செலுத்தி பிணையில் எடுப்பதற்கு எவரும் முன்வராததால் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட சமாதான செயலகக் கிளை தனது சொந்தப் பணத்திலிருந்து 2 லட்சம் ரூபாவைச் செலுத்தியதையடுத்து இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் இந்த மாதம் 26 ஆம் திகதியில் நீதிமன்றில் இருவரையும் ஆஜராகுமாறு நீதியாளர் தமிழ்க்கவி உத்தரவிட்டார்.

இதேவேளை, இவர்கள் இருவருக்கும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் சரீரப்பிணை நிற்கவேண்டும் என்ற நீதிமன்றத்தின் நிபந்தனைக்கு அமைய விடுதலைப் புலி உறுப்பினர்களான சிவராசா, புகழேந்தி ஆகிய இருவரும் சரீரப் பிணையில் நின்று அவர்களை விடுவித்தனர். இவர்கள் இருவரும் சம்பூரில் உள்ள தமிழீழ நீதிமன்றத்திலிருந்து திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தலைமையிலான குழுவினர் அழைத்துவந்து மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு சமீபமாக சுழற்சிமுறை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த இருவரின் மனைவி மற்றும் உறவினர்களிடம் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன் பின்பு ஊர்காவற் படையினருக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறையினரால் தேநீர் உபசாரம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து அங்கிருந்து அழைத்து வரப்பட்ட ஊர்காவற் படையினரை மூதூர் பொலிஸ் நிலையத்தில் வைத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தயா சமரவீர வைபவ ரீதியாகப் பொறுப்பேற்று திருகோணமலை கடற்படைத் தலைமையகத்துக்கு அழைத்துச் சென்றார்.

கடற்படை தலைமையகத்தில் இவர்களை ஜனாதிபதி சார்பில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ. கே.எச்.கருணாரத்ன, சட்டம் ஒழுங்கு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ ஆகியோர் வரவேற்று கலந்துரையாடினர். (10,04)

## இந்திய - இலங்கை பாதுகாப்பு...

கப்படவிருப்பதாகவும் புதுடெல்கித் தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் பாதுகாப்பு உடன்பாடு குறித்த தகவல்கள் அடங்கிய ஆவணங்கள், ஏற்கனவே இந்திய அதிகாரிகளால் கொழும்பிலுள்ள உயர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் -

இந்த நகல் ஆவணம் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. அத்துடன், இரு நாட்டின் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டின் கீழ் இந்தியாவிடம் இருந்து பெருமளவு இராணுவத் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கும் இலங்கை விருப்பம் தெரிவித்துள்ளது.

கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட ஆழ்கடல் ரோந்துப் படகுகள், செடக் ஹெலிகொப்ரர்கள், வான்பாதுகாப்பு ஆட்லறிகள், றொக்கட் லோஞ்சர்கள், ஆட்லறி ஷெல்கள், 7.62 மி.மீ ரவைகள், டாடா ட்ரக் வண்டிகள், ஜீப்வண்டிகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கை ஏற்கனவே விண்ணப்பித்துள்ளது.

இந்த இராணுவத் தளபாடங்களின் விற்பனை குறித்து இந்தியாவிலிருந்து வரவுள்ள உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழு இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகவும் புதுடெல்கித் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் ஐந்து நாள் விஜயமாக இலங்கை வந்திருந்த இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண்பிரகாசும் இந்தப் பாதுகாப்பு உடன்பாடு குறித்து ஆலோசனை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாரம் கொழும்பில் நடைபெறவிருக்கும் இந்திய - இலங்கை அதிகாரிகளுக்கிடையிலான பாதுகாப்பு உடன்பாடு குறித்த பேச்சுக்களில் இறுதி இணக்கப்பாடு எடுக்கப்பட்டால், அடுத்த மாதம் முதல் வாரம் ஜனாதிபதி சந்திரிகா புதுடெல்கிக்கு விஜயம் செய்யும்போது, இரு தரப்பு உடன்பாடு கைச்சாத்திடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மனிதாபிமான....

அத்துடன் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு கடந்த இரண்டரை வருடங்களாகியும் வடக்கு - கிழக்கு பகுதி தமிழ்மக்களின் வாழ்வில் எவ்வித முன்னேற்றகரமான செயற்பாடும் இடம்பெறவில்லை. எனவே இந்தப் பகுதி மக்களுக்கான அவசர மனிதாபிமான உதவிகள் வழங்கப்படுதல் வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பின்லாந்து வெளியுறவு அமைச்சின் பணிப்பாளர் ஜொகானா சூர்பா, மனிதாபிமான உதவிப் பணி ஆலோசகர் லியோ ஒலாஸ்விறா ஆசிய மற்றும் ஓசியானா பணிப்பாளர் பெக்கா மெற்சோ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

FOCUS EDUCATION CENTRE
(யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்பாக
120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்)
உயர்தர மாணவர்களுக்கான
பௌதிகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம்!
ஆகிய வகுப்புக்கள் இன்று (17.10.2004) ஆரமபிக்கின்றன.
மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
(சி-3275) நிர்வாகி

**எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கான நேர அட்டவணை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.**
**இதன்படி இந்தப் பரீட்சை டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகி, 23 ஆம் திகதி நிறைவடையும்.**

| | | |
|---|---|---|
| 13.12.2004 திங்கட்கிழமை | ஆங்கில இலக்கியம் / தமிழ் இலக்கியம் 9.00 -12.00 | வரலாறு பகுதி I 13.00 -14.00; பகுதி II 14.15 -16.15 |
| 14.12.2004 செவ்வாய்க்கிழமை | தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி I 9.00 -10.00; தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி II 10.15 -12.15 | தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி III 13.00 -15.00 |
| 15.12.2004 புதன்கிழமை | ஆங்கிலஇலக்கியம் பகுதி I 9.00 -10.00; பகுதி II 10.15 -12.15 | சைவசமயம் / இந்துசமயம் / கிறிஸ்தவம் / இஸ்லாம் பகுதி I 13.15 -14.15; பகுதி II 14.30 -16.30 |
| 16.12.2004 வியாழக்கிழமை | கணிதம் பகுதி II 9.00 -12.00 | கணிதம் பகுதி I 13.00 -14.00 |
| 17.12.2004 வெள்ளிக்கிழமை | சுகாதாரமும் உடற்கல்வியும் பகுதி I 9.00 -10.00; பகுதி II 10.15 -12.15 | புவியியல் பகுதி I 14.00 -15.00; பகுதி II 15.15 -17.15 |
| 18.12.2004 சனிக்கிழமை | சமூகவியல் / வரலாறு பகுதி II 9.00 -12.00 | சமூகவியல் / வரலாறு பகுதி I 13.00 -14.00 |
| 20.12.2004 திங்கட்கிழமை | தொழில்நுட்பவியல் பகுதி I 9.00 -10.00; பகுதி II 10.00 -12.00; வர்த்தகமும் கணக்கியலும் பகுதி II 9.00 -12.00 | வர்த்தகமும் கணக்கியலும் பகுதி I 13.00 -14.00 |
| 21.12.2004 செவ்வாய்க்கிழமை | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பகுதி II 9.00 -12.00 | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பகுதி I 13.00 -14.00 |
| 22.12.2004 புதன்கிழமை | சித்திரம் பகுதி I 9.00 -10.00; பகுதி III 10.15 -12.15; பரதநாட்டியம் / சங்கீதம் பகுதி I 9.00 -10.00; பகுதி II 10.15 -12.15 | சித்திரம் பகுதி II 13.00 -15.00 |
| 23.12.2004 வியாழக்கிழமை | | இரண்டாம்மொழி சிங்களம் / தமிழ் பகுதி I 13.00 -14.00; பகுதி II 14.15 -16.15 |

# மரண அறிவித்தல்



## திருமதி புவிராசா விசாலாட்சி

(சரஸ்வதி)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வளலாயை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணத்தில் வசித்துவந்தவருமான புவிராசா விசாலாட்சி காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - செல்லம்மா தம்பதியினரின் மூத்த புதல்வியும், புவிராசாவின் அன்பு மனைவியும் ஸ்ரீஸ்கந்தராஜா (ஆசிரியர் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), காலஞ்சென்ற ஸ்ரீசந்திரராசா (ஆசிரியர் - உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), ஸ்ரீசுந்தரராஜா (மருந்தாளர், மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்துறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சசிக்கா (ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), சந்திரகுமாரி (ஆசிரியர், யா/சென்தோமஸ் றோ.க.த.க.வித்தி. - பருத்தித்துறை) சுமதி (ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சமித்யா, அருண்யா, ஸ்ரீவரன், பவித்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கந்தசாமி, செல்வராஜா, செல்வபாக்கியம், தெய்வநாயகி, யோகம்மா, காலஞ்சென்ற குமரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பண்டாரம், வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாச மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 இற்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு பிற்பகல் 1.30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*844, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P: 222 7086*

தகவல்:
ப.புவிராசா (கணவர்).
(குடும்பத்தினர்)

(963)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.